பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 கார்த்திகை 9 திங்கட்கிழமை (25-11-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:363

## ரணில் - பாலா நேற்று 45 நிமிடநேரம் பேச்சு!

### மூடிய அறைக்குள் நடந்தது; தீவக நிலைமையும் ஆராய்வு



ஒஸ்லோ,நவ.25

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அன்ரன் பாலசிங்கமும் நேற்று நோர்வே நேரப்படி மாலை 5 மணிக்கு ஒஸ்லோவில் மூடிய அறைக்குள் சுமார் 45 நிமிட நேரம் பேச்சு நடத்தினர்.

பேச்சு நடந்த அறையின் வாசலில் நின்ற ஊடகவியலாளர்கள் குறுக்கிட்டு என்ன பேசப் போகிறீர்கள் என்று கேட்டனர்.

"இன்னும் அதிகம் எதிர்பார்ப்போம்" என்றார் பிரதமர் ரணில்.

அன்ரன் பாலசிங்கம் "எங்கள் பேச்சு ஒரு திருப்புமுனை" என்றார். "சமாதான முன்னெடுப்புக்களின் வெற்றிக்கு அதீதமான முயற்சி இது" என்று கூறினார். பிரதமர் பேசுவதற்கு தனியாகவே சென்றார். அன்ரன் பாலசிங்கம் தமது பாரியாரும் செயலாளருமான அடேல் பாலசிங்கத்துடன் சென்றார்.

பேச்சின்போது நோர்வே அனுசரணையாளர்களான விடர் ஹெலக்ஸனும் எரிக் சொல் ஹெய்மும் உடன் இருந்தனர். (14ஆம் பக்கம் பார்க்க)

*பிரதமர் ரணில் - அன்ரன் பாலசிங்கம் சந்திப்பு - மேலும் படங்கள் கடைசிப்பக்கத்தில்.*

# ஒஸ்லோவில் இன்று காலை சமாதான ஆதரவுக் கூட்டம்

## இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட 39 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்

- ஒஸ்லோவிலிருந்து ந.வித்தியாதரன் -

ஒஸ்லோ,நவம்பர்25

**இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் சமாதான ஆதரவுக் கூட்டம் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவின் மலைப்பகுதியில் உள்ள ஹொல்மென்கொலென் பார்க் ஹோட்டல் ரிக்காவில் இன்று காலை நோர்வே நேரப்படி 10.00 மணிக்கு (இலங்கை நேரம் மாலை 3.00 மணி) ஆரம்பமாகிறது. இந்தக் கூட்டத்தில் இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட 39 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கிறார்கள்.**

மாநாட்டின் ஆரம்ப வைபவம் காலை 10 மணிமுதல் 11 மணிவரை நடைபெறும். பின்னர் மதிய உணவுக்கு முன் ஒன்றும் அதற்குப் பிறகு இன்னொன்றுமாக இரண்டு அமர்வுகள் இடம்பெறும். மாலை 5 மணிக்கு ஊடகவியலாளர் மாநாடு நடைபெறும்.

இலங்கைக் குழுவுக்கு தலைமை தாங்கி வந்திருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகள் குழுவின் தலைவர் அன்ரன் பாலசிங்கமும் நேரில் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசினர். இப்படி ஒரு சந்திப்பும் பேச்சும் நடந்தது இதுவே முதல் முறை. இந்த வரலாற்று முக் (13ஆம் பக்கம் பார்க்க)

### மாவீரர் எழுச்சிநாள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.25

மாவீரர் தினத்துக்கு முந்திய மாவீரர் எழுச்சி நாள்கள் இன்று முதல் ஆரம்பமாகின்றன.

குடாநாட்டில் இன்றும் நாளையும் எழுச்சி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று காலை பிரதான வைபவம் இடம்பெறவுள்ளது. தேசியக்கொடியேற்றல், சுடரேற்றல், மலரஞ்சலி ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

மாவீரர்களை நினைவு கூர்வதற்காக, குடாநாடு விழாக்கோலம் பூண்டுள்ளது. *(மற்றொரு செய்தி 2 ஆம் பக்கத்தில்)*

(ஐ-9)

### நாளை மருதங்கேணியில்

## குடாரப்பு தரையிறக்கம்; நினைவுக் காட்சி திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

விடுதலைப் புலிகள் ஆனையிறவுப் பெருந்தளத்தைக் கைப்பற்றி வெற்றிகொள்வதற்கு அடிகோலிய விசேட படையணியின் குடாரப்பு தரையிறக்கத் தாக்குதலின் நினைவுக் காட்சி வடமராட்சி கிழக்கில் மருதங்கேணிச் சந்தியில் நாளை திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் கடற்புலிகளினதும், கடற்கரும்புலிகளினதும் விசேட படையணிகளின் கண்கவர் அணிநடை இடம்பெறும். தொடர்ந்து சிறப்புற வடிவமைக்கப்பட்ட மாவீரர் கலையரங்கில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

வடமராட்சி கிழக்குப் பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்கள், சமாசம், கூட்டுறவுச் சங்கங்கள், தென்னை, பனை வள அபிவிருத்திச் சங்கங்கள், விவசாய உற்பத்திச் சங்கங்கள், புனரமைப்புக் குழு ஆகியன இந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருக்கின்றன.

(ஐ)

### ஒஸ்லோ சமாதான ஆதரவுக் கூட்டம்:

## அரசு - புலிகள் சமாதான இயக்கத்தை சர்வதேச மயப்படுத்துவதே நோக்கம்

### அமைச்சர் மிலிந்த மொறகொட விமானத்தில் பேட்டி



"இன்று நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் நாட்டின் அல்லது வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கான பெரிய தொகை நிதி உதவி பற்றிய அறிவிப்பு வராது. ஆனால், அதற்கான இணக்கம் பற்றிய அரசியல் பிரகடனத்தை உதவிவழங்கும் நாடுகள் விடுக்கக் கூடும்."

- இவ்வாறு கருத்து வெளியிட்டார் விஞ்ஞான, கைத்தொழில் மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட.

நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) நள்ளிரவு கொழும்பிலிருந்து நோர்வேக்கு விமானத்தில் பறந்து கொண்டிருந்த சமயம், விமானத்தில் வைத்து உதயனுக்கு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- (13ஆம் பக்கம் பார்க்க)

## ரூபா 18 கோடி செலவில் அதிநவீன 'பீச் கிராப்ட்'

கொழும்பு,நவ.25

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட அதிநவீன தொழில்நுட்பங்கள் கொண்ட 'பீச் கிராப்ட்' விமானம் ஒன்றை இலங்கை கொள்வனவு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் வழங்கிய விசேட அனுமதியினாலேயே இலங்கை அந்த ரக விமானத்தைக் கொள்வனவு செய்ய முடிந்திருக்கிறது. அந்த விமானத்தின் பெறுமதி 18 கோடி ரூபா எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் இந்த ரக விமானங்கள் அமெரிக்க ஜனாதிபதியின் அனுமதியுடன் பிரிட்டனுக்கும் இஸ்ரேலுக்கும் விற்பனை செய்யப்பட்டிருக்கின்றன.

இலங்கை கொள்வனவு செய்த விமானம் கட்டுநாயக்கா விமானப் படைத்தளத்துக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (ஐ-9)

### உள்ளே....!

அமைச்சர் மகேஸ்வரனின்
நெடுந்தீவு விஜயம்,
அங்கு இடம்பெறும்
உண்ணாவிரதப்
போராட்டம் தொடர்பான
செய்திகள், படங்கள்
2 ஆம்
பக்கத்தில்....

## கூட்டம் நடக்கும் ஹோட்டல் பனியால் மூடிக்கிடக்கிறது

ஒஸ்லோ,நவ.25

ஒஸ்லோவில் சமாதான ஆதரவுக் கூட்டம் நடைபெறவுள்ள ஹொல்மென் பார்க் ஹோட்டல் ரிக்கா பனியால் மூடிக்கிடக்கிறது.

மலைப்பகுதியில் ஹோட்டல் அமைந்திருப்பதால் அடிக்கடி இப்படி நடப்பதாகக் கூறப்படுகிறது.

பனி விடயத்துக்குப் பழக்கமில்லாத இலங்கைப் படப்பிடிப்பாளர் ஒருவர், படம் எடுக்கச் சென்றபோது சறுக்கி வீழ்ந்து, காலை உடைத்துக்கொண்டார். அவர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டார்.

(ஐ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்





நெடுந்தீவில் ஈ.பி.டி.பியினரை வெளியேறக் கோரி நடத்தப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்று கலந்துகொண்ட பொது மக்களில் ஒரு பகுதியினரையே படங்களில் காண்கிறீர்கள். நேற்று அங்கு சென்ற 'உதயன்' படப்பிடிப்பாளர் எடுத்து வந்த காட்சிகள்.







நேற்று நெடுந்தீவுக்கு விஜயம் செய்த அமைச்சர் மகேஸ்வரன் அங்கு பொலீஸ் அதிகாரிகள், புலிகளின் அரசியல் துறையினர், பொதுமக்கள் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடுவதை மேலே உள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்:பிரேம்)*

# ஈ.பி.டி.பி. உறுப்பினர்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படும் என்கிறது பொலீஸ்

## நெடுந்தீவு மக்களிடம் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம்,நவ.25

நெடுந்தீவில் பிரதேச சபை அலுவலகம் அதற்கு முன்பாக உள்ள கட்டடம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் நடமாடுவது இன்று முதல் தடை செய்யப்படுவதாக பொலீஸ் அதிகாரிகள் பொதுமக்களுக்கு உறுதி அளித்துள்ளனர்.

நேற்று நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் ஏற்பாட்டில் பொது மக்கள், பொலீஸார் பங்குபற்றிய சந்திப்பு ஒன்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் யாழ்.பொலீஸ் அத்தியட்சகர் குளுவர்த்தனா, நெடுந்தீவு பொலீஸ் அத்தியட்சகர் ஜெயவர்த்தன ஆகியோரும் பொதுமக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஈ.பி.டி.பியினர் நெடுந்தீவில் இருந்து வெளியேறும் வரை மக்கள் போராட்டம் தொடர்ந்து நடக்கும் என்றும் -

ஈ.பி.டி.பியினரின் அச்சுறுத்தல்களில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்கு தற்காலிக ஏற்பாடாக ஈ.பி.டி.பியினரின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி மக்களின் பாதுகாப்பான நடமாட்டத்தை உறுதி செய்ய வேண்டும் என்றும் -

பொது மக்கள் தரப்பில் கோரப்பட்டது.

மக்களின் பாதுகாப்பான நடமாட்டத்துக்கு உதவும் வகையில், மாலை 6 மணிக்குப் பின்னர் ஈ.பி.டி.பியின் உறுப்பினர்கள் அவர்கள் தங்கியிருக்கும் இடத்துக்கு வெளியே நடமாடுவதைத் தடை செய்வதாகவும் -

வெளியில் அவர்கள் செல்வதாயின் பொலீஸார் பாதுகாப்பு வழங்குவர் எனவும் -

பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈ.பி.டி.பியினர் பொது மக்களுக்கு கொலை அச்சுறுத்தல்களை விடுபபதாகப் பொதுமக்கள் தரப்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு அச்சுறுத்தல்கள் ஏதும விடுக்கப்பட்டால் - அது பற்றி பொலீஸ நிலையத்தில் முறைப்பாடு செய்தால - சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸ் தரப்பினர் பொதுமக்களுக்கு உறுதி அளித்தனர்.

நெடுந்தீவு பிரதேச செயலக கட்டடத்தில் இருந்து உடனடியாக ஈ.பி.டி.பியினரை வெளியேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

(ஐ-9)

## நெடுந்தீவில்

# உண்ணாவிரதப் போர் உணர்வுடன் தொடர்கிறது!

யாழ்ப்பாணம்,நவ.25

நெடுந்தீவில் இருந்து ஈ.பி.டி.பியினர் வெளியேறவேண்டும் என்று கோரி நான்காவது நாளாக நேற்றும் அங்கு உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்தது.

நகரில் இருந்து 200 யார் தூரத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட கொட்டகையில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெறுகின்றது.

நெடுந்தீவில் வாழும் சுமார் 4 ஆயிரம் பேரில் நாளாந்தம் 200 பேர் வீதம் சுழற்சி முறையில் உண்ணாவிரதத்தில் ஈடுபடுகின்றனர்.

நேற்று அங்கு விஜயம் செய்த இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் உண்ணாவிரதிகளுடன் கலந்துரையாடினார்.

ஈ.பி.டி.பியினர் வெளியேறும் வரை தமது போராட்டம் தொடரும் என்று போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ள நெடுந்தீவு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தை ஒட்டி நெடுந்தீவில் கடந்த 10 தினங்களாக பாடசாலைகள், அரச செயலகங்கள், வர்த்தக நிலையங்கள் இயங்கவில்லை.

மீன்பிடித் தொழில் விவசாயத் தொழில் ஆகியனவும் செயலிழந்துள்ளன.

நெடுந்தீவுக்கான போக்குவரத்தும் ஸ்தம்பித்துள்ளது.

(ஐ-3)

# மக்களைப் புலிகள் தூண்டுவதாக ஈ.பி.டி.பி. கூறுவது முழுப்பொய்!

## நெடுந்தீவு சென்று பார்வையிட்ட அமைச்சர் மகேஸ்வரன்



நெடுந்தீவில் மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டங்களின் பின்னணியில் விடுதலைப் புலிகள் இருப்பதாக ஈ.பி.டி.பியினர் செய்துவரும் பிரசாரம் பொய்யானது. மக்கள் உணர்வுபூர்வமாகப் போராட்டத்தில் பங்குபற்றுவதை அங்கு நேரில் கண்டேன்.

- இப்படி இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர், உண்ணாவிரதிகள் மத்தியில் பேசுகையிலேயே இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் இருந்து ஈ.பி.டி.பியினர் வெளியேறவேண்டும் என்ற நோக்குடன் மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்தின்மூலம் எதிரி பலமடையாமல் இருப்பதற்கு ராஜதந்திர நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

இங்குள்ள மக்கள் மேற்கொள்ளும் போராட்டம் நியாயமானது. புலிகள்தான் இப்போராட்டத்தின் பின்னணியில் இருப்பதாக ஈ.பி.டி.பியினர் செய்யும் பிரசாரத்தில் உண்மையில்லை. இதை இங்கு நேரில் காண்கின்றேன்.

மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு ஒத்துழைப்பதாகப் பொலீஸார் உறுதி அளித்துள்ளனர். பொது மக்கள் பொலீஸாருடன் ஒத்துழைத்து செயற்பட்டு, தமது உரிமைகளை நிலைநாட்டவேண்டும்.

ஈ.பி.டி.பியினருடன் ஒத்துழையாமைப் போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் அவர்களைத் தனிமைப்படுத்தலாம் - என்றார் அமைச்சர் மகேஸ்வரன்.

அமைச்சர் நெடுந்தீவு பொலீஸ் நிலையம் உட்பட நகரப் பகுதியையும் பார்வையிட்டார்.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பணிமனைக்கும் அமைச்சர் சென்று விடுதலைப் புலிகளின் நெடுந்தீவுப் பொறுப்பாளர் கண்ணனுடன் கலந்துரையாடினார்.

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பேரானந்தத்துடனும் அமைச்சர் கலந்துரையாடி நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

(ஐ-3)

# குடாநாடெங்கும் விழாக் கோலம்

யாழ்ப்பாணம்,நவ.25

சுமார் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இம்முறை மாவீரர்களை நினைவு கூரும் கொண்டாட்டங்கள் குடா நாட்டில் களைகட்டியிருக்கின்றன.

மாவீரர் நாளை எழுச்சியுடன் எதிர்கொள்ள முழு குடாநாடுமே விழாக் கோலம் பூண்டுள்ளது.

நகரங்கள், பிரதானவீதிகள், சந்தைப்பிரதேசங்கள் எங்கும் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

வீடுகள், கடைகள், பாடசாலைகள், முக்கிய அரச கட்டடங்கள் எங்கிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. எங்கும் புரட்சி கானங்கள் இசைக்கப்பட்டு வருகின்றன.

மாவீரர் துயிலும் இல்லங்கள் அமைந்துள்ள கோப்பாய், கொடிகாமம், வடமராட்சி பகுதிகளில் விசேட அலங்காரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மக்கள் வீதிகளிலும், பொது இடங்களிலும் மாவீரர் நினைவுக் குடில்களை அமைத்து வருகின்றனர்.

கண்ணைக்கவரும் அலங்கார சோடனைகளை அவற்றில் காண முடிகிறது. மாவீரர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட்டுள்ள பந்தல்களில் இன்று காலை சுடர் ஏற்றலும் மலரஞ்சலியும் இடம்பெறவுள்ளன.

இன்று காலை முதல் துயிலும் இல்லங்களில் விசேட வைபவங்கள் ஆரம்பமாகும். மாவீரருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பொதுமக்களின் வசதி கருதி விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

27 ஆம் திகதி மாவீரர் தினத்தன்று நடக்கவிருக்கும் தேசிய வைபவங்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாக மாவீரர் பணிமனைகள் அறிவித்திருக்கின்றன.

இறுதி நாள் நிகழ்வுகளில் இம்முறை மக்கள் வெள்ளமெனத் திரள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-12)

பலஸ்தீன அகதி முகாம் மீதான

# இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையில் ஐ.நா. பணியாளர் ஒருவர் உயிரிழந்தார்!

லண்டன்,நவம்பர் 25

**மேற்குக்கரையின் ஜெனின் நகரில் இஸ்ரேலிய இராணுவம் ஐ.நா.பணியாளர் ஒருவரை சுட்டுக்கொன்றுவிட்டது. பலஸ்தீன அகதிகள் முகாமில் இஸ்ரேல் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போதே இவர் கொல்லப்பட்டார்.**

மேற்குக்கரையின் ஜெனின் நகர அகதிமுகாம்மீது கடந்த வெள்ளிக்கிழமை இஸ்ரேலியப் படையினர் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர். அப்போது ஐ.நா. பணியாளர் ஒருவர் இஸ்ரேலிய இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். இதனை இஸ்ரேலிய இராணுவம் அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளது.

மேற்குக்கரையில் உதவிப் பணிகளை மேற்கொண்டுவரும் புனரமைப்பு பணிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் ஊழியரான லெய்ன் ஹுக்(வயது53) என்பவரே கொல்லப்பட்டவராவார். இவர் பிரிட்டனைச் சேர்ந்தவர்.

அகதிமுகாமின் அருகே இருந்த ஐ.நா. அலுவலகத்தில் ஒருவர் கைத்துப்பாக்கி போன்ற ஒன்றுடன் காணப்பட்டதை இஸ்ரேலியப் படையினர் இருவர் கண்டதாகவும் -

அதனால் அவரை நோக்கி அவர்கள் சுட்டதாகவும் -

தமது முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். இஸ்ரேலிய இராணுவம் சுட்டதைத் தொடர்ந்து பதிலுக்கு ஐ.நா. அலுவலக வளாகத்திலிருந்து துப்பாகிச் சூடு நடத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.நா. அமைப்பின் கொடியைத் தாங்கியிருந்த பெண்கள் உட்பட பொதுமக்களை பலஸ்தீனத் தீவிரவாதிகள் மனித கேடயங்களாகப் பயன்படுத்தியதாகவும் இஸ்ரேலிய இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது.

ஆனால், இஸ்ரேலிய இராணுவத்தின் இந்தத் தகவல்களை ஐ.நா. நிராகரித்துள்ளது. ஐ.நா. பேச்சாளர் போல் மக்கன் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது:-

ஐ.நா. அலுவலக வளாகத்திலிருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் கூறுவது முற்றிலும் நம்பமுடியாத விடயம். சுடப்படும் சமயத்தில் ஹுக் கைத்தொலைபேசி ஒன்றில் பேசிக்கொண்டிருந்ததாக எமது விசாரணையில் தெரியவந்துள்ளது. அப்பகுதியில் உள்ள ஐ.நா. பணியாளர்களை பாதுகாப்பான இடமொன்றுக்கு



ஹுக்கின் அடையாள அட்டை

வெளியேற்றும் முயற்சியில் ஹுக் ஈடுபட்டிருந்தார் என்று ஐ.நா.பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின்போது தகர்க்கப்பட்ட பலஸ்தீனர்களின் வீடுகளை மீளக் கட்டியெழுப்பும் ஐ.நா. திட்டத்தில் ஹுக் பணியாற்றி வந்தார். இந்தச் சம்பவம் தம்மை மிக மோசமாகப் பாதித்துள்ளதாக ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



ஜெனின் நகர ஐ.நா. அலுவலக வளாகம்

# சிறையில் முருகன் - நளினி 94ஆவது முறையாக சந்திப்பு

சென்னை,நவ.25

ராஜீவ் காந்தி கொலை வழக்குக் குற்றவாளிகளான நளினியும் முருகனும் சனிக்கிழமை 94ஆவது முறையாக சந்தித்துப் பேசினர்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி, முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களில் மேல்முறையீட்டில் நளினிக்கு மட்டும் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைககப்பட்டது.

நளினி வேலூர் மகளிர் தனிச் சிறையிலும், மற்ற மூவரும் வேலூர் மத்திய ஆண்கள் சிறையிலும் உள்ளனர். நளினியின் கணவரான முருகன் 15 நாள்களுக்கு ஒரு முறை நளினியைப் பெண்கள் சிறைக்குச் சென்று சந்தித்துப் பேச அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

94ஆவது முறையாக இவர்களின் சந்திப்பு சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 9மணி வரை நடந்தது.

# பிரெஞ்சு நடனக்குழுவின் தீண்டாமைக்கு அபராதம்!

தீண்டாமைக் கொடுமை மேற்குலக நாடுகளில்கூட வேறு ருபத்தில் தாண்டவமாடுகிறது என்பதை பிரான்ஸ் நாட்டில் நடந்துள்ள சம்பவம் நிருபித்து இருக்கிறது.

அங்கு 'மோலின் ருக்' என்ற பெயரில் புகழ்பெற்ற நடனக்குழு செயற்பட்டு வருகிறது.

கடந்த 40 ஆண்டுகளாக இந்த நடனக்குழுவினர் பிடிவாதமாக ஒரு கொள்கையைப் பின்பற்றி வருகின்றனர். நடனக்குழுவில் வெள்ளைக்காரர்கள் மட்டும்தான் இருப்பார்கள். கறுப்பினத்தவருக்கு இடமளிப்பது இல்லை. சமையல் அறையில் மட்டுமே அவர்களுக்கு வேலை கொடுப்பார்கள்.

கடந்த ஆண்டு இந்த நடனக் குழுவுக்கு அய்தோலியா மாரேகா என்பவர் வேலை கேட்டு விண்ணப்பம் செய்தார். அவர் ஆபிரிக்காவில் உள்ள செனகல் நாட்டைச் சேர்ந்த கறுப்பினத்தவர். ஆகவே, அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

இதை எதிர்த்து மாரேகா நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அவருக்கு நஷ்டஈடாக 10 லட்சம் ரூபா கொடுக்கவேண்டும் என்று மோலின் ருக் நடனக்குழுவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிஇருக்கிறது.

# பதற்றத்தை அதிகரிக்கும் போதைப்பொருள் பழக்கம்

பரிஸ்,நவ.25

போதைப் பொருள்களைத் தொடர்ந்து பயன்படுத்தி வந்தால், பதற்றம், சிந்தனைக்குழப்பம் ஆகிய பாதிப்புக்கள் ஏற்படும் என்று ஆஸ்திரேலிய நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்தில் ஆயிரத்து 601 மாணவர்களிடம் 7 ஆண்டுகள் நடத்திய சோதனையில் இது தெரியவந்துள்ளது.

அடிக்கடி கானபிஸ் போதைப் பொருள்களைப் பயன்படுத்தியவர்களில் இளைஞர்களை விட இளம்பெண்களுக்குப் பாதிப்பு அதிகமாக இருந்தது.

நாள்தோறும் அப்போதைப் பொருளைப் பயன்படுத்தியவர்கள், அதைப் பயன்படுத்தாதவர்களை விட 5 மடங்கு அதிக மனப்பாதிப்புக்கு உள்ளாவர் என்பதும் வாரத்துக்கு இரு முறை பயன்படுத்துவோர் இருமடங்கு அதிக மனப்பாதிப்புக்கு உள்ளாவர் என்பதும் தெரியவந்தது.

# செப்.11 தாக்குதலாளிகளுக்கு சவூதிஅரேபிய இளவரசி உதவி?

லண்டன்,நவ.25

அமெரிக்காவில் இடம்பெற்ற செப்ரெம்பர் 11 தாக்குதலில் ஈடுபட்டவர்களில் இருவருக்கு சவூதிஅரேபிய இளவரசி பண உதவி செய்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இதனை சவூதிஅரேபியா மறுத்துள்ளது.

அமெரிக்க ஊடகங்கள் வெளியிட்ட தகவல்களின்படி தெரியவருவதாவது:-

விமானத் தற்கொலைத் தாக்குதலில் ஈடுபட்ட காலித் அல் மிஹ்தர் மற்றும் நவாவ் அல் ஹஜ்மி ஆகியோருக்கு இளவரசி ஹைபாஅல் பைசல் பெயரில் சுமார் 35 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்காவுக்கான சவூதி அரேபியத் தூதராக இளவரசியின் கணவர் பணியாற்றுகிறார். அமெரிக்காவில் கல்விகற்கும் இரு மாணவர்களுக்கு இந்தப் பணத்தை இளவரசி வழங்கியுள்ளார். அவர்களிடமிருந்து தீவிரவாதிகள் இருவரும் இப்பணத்தைப் பெற்றுள்ளனர்.

தீவிரவாதிகளுக்கு இளவரசியால் நேரடியாகப் பணம் கொடுக்கப்படவில்லை. ஆயினும், தான் குற்றமற்றவர் என்பதை நிருபிக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உண்டு என்று சவூதி அரேபிய அரசின் பேச்சாளர் நெய்ல் அல் ஜுபைர் தெரிவித்தார்.

செப்ரெம்பர் 11 தாக்குதலை நடத்தியதாக அடையாளம் காணப்பட்ட 19பேரில் 14 பேர் சவூதிஅரேபியர்களாவர். இதன் காரணமாக இந்தப் பண உதவி விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக் மற்றும் அல்கெய்டா விவகாரங்களில் பெரும்பாலான வளைகுடா நாடுகள் அமெரிக்காவுடன் முரண்படத் தொடங்கியுள்ளன. வளைகுடா நாடுகளில் பிரதானமான சவூதிஅரேபியாவும் அமெரிக்காவுக்கு எதிராக சில கருத்துக்களை வெளியிட்டு வந்தது.

இந்தவேளையில், அமெரிக்க ஊடகங்கள் ஊடாக சவூதி இளவரசி சம்பந்தப்பட்ட இந்தப் பண உதவி விவகாரம் வெளியிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)


ஹொங்கொங்கிற்குச் சமீபமாக சீனக் கடற்பரப்பில் 20ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோலிய திரவ வாயுவை ஏற்றிவந்த எண்ணெய்த் தாங்கிக் கப்பல் நேற்று தீப்பிடித்து தொடர்ந்து எரிகிறது. இக்கப்பல் வெடித்துச் சிதறக்கூடும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

வீரப்பன் கடத்தி வைத்துள்ள

# எனது கணவருக்கு ஏதாவது நேர்ந்தால் குடும்பத்துடன் தற்கொலை செய்வேன்!

## நாகப்பாவின் மனைவி எச்சரிக்கை

பெங்களூர்,நவ.25

'எனது கணவருக்கு' ஏதாவது நேர்ந்தால் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்வோம்' என்று கர்நாடக முதல்வர் கிருஷ்ணாவிடம், சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பனால் கடத்தப்பட்ட நாகப்பாவின் மனைவி பரிமளா கோபத்தோடு கூறியுள்ளார்.

நாகப்பாவை மீட்க கொளத்தூர் மணியை 12நாள்களுக்குள் அனுப்புமாறு கடந்த வியாழக்கிழமை அனுப்பியிருந்த ஒலிநாடாவில் வீரப்பன் தெரிவித்திருந்தார்.

இதனால் அச்சமடைந்த நாகப்பாவின் மனைவி பரிமளா, மகன் பிரீத்தம், மகள் பவனா, மருமகன் கிரண் பாட்டீல் ஆகியோர் கிருஷ்ணாவை சந்தித்துப் பேசினர்.

'வீரப்பன் கெடு விதித்திருப்பதால் மிகவும் பயமாக இருக்கிறது' என்று நாகப்பா மனைவி கூறியுள்ளார்.

நாகப்பா பத்திரமாக மீட்கப்படுவார், பொறுமையாக இருக்க வேண்டும் என்று அவரிடம் கிருஷ்ணா கூறியுள்ளார்.

'இவ்வாறு ஒவ்வொரு சமயமும் கூறிவருவது எங்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இதனால் எங்களுக்கு வாக்குறுதி வேண்டாம், விரைந்து நடவடிக்கை எடுத்து வீரப்பன் விதித்துள்ள கெடு முடிவதற்குள் நாகப்பாவை மீட்டுத் தாருங்கள்' என்று பரிமளா கோரினார்.

இதற்கு முதல்வர் பதிலளிக்கையில் எனது நிலையில் நீங்கள் இருந்தால் இதுபோல் பேசமாட்டீர்கள் என்று கூறியுள்ளார்.

அதற்கு பரிமளா, 'எனது நிலையில் நீங்கள் இருந்து பாருங்கள் அப்போது தெரியும்' என்று கூறியுள்ளார். இதனால் அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.

'எனது கணவருக்கு ஏதாவது நேர்ந்தால், அதற்கு நீங்களே பொறுப்பு அப்படி ஏதாவது நேர்ந்துவிட்டால், நாங்கள் அனைவரும் உங்கள் முன் தற்கொலை செய்து கொள்வோம்' என்று கூறிவிட்டு பரிமளா கோபமாக அங்கிருந்து வெளியேறியதாகத் தெரிகிறது. (ஒ)

## தூதராக கொளத்தூர் மணி

வீரப்பனிடமிருந்து நாகப்பாவை மீட்க கொளத்தூர் மணியை தூதராக அனுப்ப கர்நாடக அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இதற்கு வசதியாக அவர் மீதான வழக்குகளை ரத்துச் செய்து அவரை விடுதலை செய்ய முயற்சி செய்வது உட்பட அனைத்து வழிகளையும் பரிசீலிக்க அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பான தீர்மானம் அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பண்டத்தரிப்பு - இளவாலை வீதியில்

# மரங்களைத் தறிக்கும்படி கோருகிறது மின்சாரசபை

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து இளவாலை வரையிலான பகுதிகளுக்கு உயர் அழுத்த மின்விநியோகத்தை வழங்குவதற்கு வசதியாக வீதி ஓரத்திலுள்ள பனைகள், தென்னைகள் மற்றும் மரங்களைத் தறித்து உதவுமாறு மின்சார சபையினர் வீதி ஓரத்திலுள்ள வீட்டு உரிமையாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முன்னர் இந்தப்பகுதிக்கான மின்சாரம் பண்டத்தரிப்பு வயல் வெளிக்கூடாக மின் தூண்கள் நடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. பின்னர் யுத்தகால அனர்த்தங்களை அடுத்து இத்தூண்கள் பராமரிக்கப்படாமல் சரிந்து வீழ்ந்துவிட்டன.

இதனையடுத்து மேற்படி உயர் அழுத்த மின் விநியோகத்தை பண்டத்தரிப்புச் சந்தியில் இருந்து பிரதான வீதி வழியாக - பெரியவிளான் ஊடாக - இளவாலைக்குக் கொண்டுசெல்வதற்கு மின் தூண்கள் நடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, தமது பயன்தரு மரங்களை அழித்து அகற்றுவதற்கு தாம் விரும்பவில்லை என்றும் -

மின் கம்பிகளை முன்னர் இருந்ததுபோல வயல்வெளிகள் ஊடாகக் கொண்டு செல்லுமாறும் இப்பகுதி மக்கள் மின்சார சபையின் யாழ்மாவட்ட மின் பொறியியலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர். பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கமும் இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சண்டிலிப்பாய் - சங்கானைப் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளருக்கும் இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (எ-135)

## மாநகரசபைப் பிரிவில் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகள்

கொழும்புத்துறை,நவ.25

யாழ்.மாநகரசபை சுகாதாரப் பகுதியினரும் யுனிசெவ் நிறுவனத்தினரும் இணைந்து ஆரம்ப சுகாதார விழிப்புணர்வு நாடக நிகழ்வுகளை நிகழ்த்தி வருகின்றனர்.

இந்நிகழ்வினூடாக சுகாதார வழிமுறையினை இலகுவாகக் கைக்கொண்டு, கொடிய நோய்களிலிருந்து எவ்வாறு தப்பித்துக் கொள்ளலாம் என்பது பற்றிய விளக்கமும் அறிவுரையும் புகட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பாடசாலைகளில் இந்த ஆரம்ப சுகாதார விழிப்புணர்வு நாடகம் தற்போது மேடையேற்றப்பட்டு வருகிறது. (எ-30)

## வீதி விபத்தில் நால்வர் காயம்!

மூன்று வீதி விபத்துக்களில் காயமடைந்த நால்வரில் மூவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மயிலங்காடுப் பகுதியில் நேற்று முன்தினம் நாயொன்று குறுக்காக ஓடியதால் நிகழ்ந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் ஏழாலையைச் சேர்ந்த முத்தையா பாலேந்திரன் (வயது 52) அவரின் மனைவி பாலேந்திரன் பாலவதனி (வயது 42), மகன் சங்கீர்த்தனன் ஆகிய மூவரும் காயமடைந்தனர்.

இதேவேளை - நல்லூரில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதிக்கொண்ட விபத்தில் சைக்கிளை ஓட்டிச் சென்றவரான கைதடியைச் சேர்ந்த என்.விஜயரஞ்சினி (வயது 32) என்பவர் காயமடைந்தார். (எ-15)





முதன் முறையாக
தொழிற்சாலையின்
5 வருட உத்தரவாதம்
BS No : 5412:1996
License No : KM41240
Access Graphics
சென்றி அந்தனிஸ் ஹார்ட்வெயார் (பிறைவேட்) லிமிட்டட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337236 (நேரடி), 324261-5, 337253-5
பெக்ஸ்: 446554
WATERTEC
முத்திரையை அவதானியுங்கள்
விநியோகஸ்தர்:
நாராயணா கட்டடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



PRESIDENT®



CFL
பல்புகள், சர்வதேச அங்கீகாரம் பெற்ற
80% மின்சார சேமிப்பை 1 வருட
உத்தரவாதத்துடன் வழங்குகின்றது
போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்
CEB இன் அங்கீகாரம் பெற்று
இலகு தவணை முறையில் கிடைக்கின்றது
JAFFNA ELECTRICALS
ISO 9002
No. 06, Stanley Road, Jaffna.


## ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்., வைப்புகள் மீளளிப்பு

எமது வைப்பீட்டாளருக்கு அவர்களது வைப்புத் தொகை மீதியின் ஐந்து சதவீதம் (5%) மேலும் ஒரு மீளளிப்பாக 2002 நவம்பர் மாதம் 25ஆம் திகதியில் இருந்து அலுவலக நாள்களில் காலை 9.30மணியில் இருந்து மாலை 3.30 மணிவரை வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறோம். மீளளிப்பின் போது வைப்புச் சான்றிதழும், வைப்பாளரின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

நேரில் வரமுடியாதோர் வைப்புச் சான்றிதழை தமது உறுதிப்படுத்திய அடையாள அட்டைப் பிரதியுடன் உரிய முறையில் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறொருவர்மூலம் அனுப்பியோ அல்லது மேற்படி ஆவணங்களை சுய முகவரி இடப்பட்ட தபால் உறையுடன் கீழ்க்காணும் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பியோ வைப்பாளர் தமது காசோலையைப் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய நிர்வாகம்
Shabra Unico Finance Ltd.
21/9, Polhengoda Garden, Colombo - 05 T.P.: 853637
(C/25052)


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குழப்பம்,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:
வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய (சபிண்டீகரண) அழைப்பும்

மண் வாழ்வு
02 - 08 - 1929



விண் வாழ்வு
26 - 10 - 2002

### நா.மு.ஆறுமுகம் (அப்பு)

திதி: 25.11.2002

அன்பாய், ஆதரவாய், பண்பாய் வாழ்ந்த அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் இல்லத் தலைவனின் வீட்டுக்கிருத்தியம் (சபிண்டீகரணம்) இன்று (25.11.2002) திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

இன்று நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"அன்ன அகம்",
அல்வாய் தெற்கு. (10839)
குடும்பத்தினர்.

## 18ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



தர்மரத்தினம் புவீந்திரன் (புவி)
தோற்றம்: 22.09.1964
அழிப்பு: 25.11.1984

"நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தை காத்துக் கொண்டேன்"
II தீமோ 4:7

என்றும் நினைவு கூரும்:
தாய், சகோதரி, சகோதரர்கள்,
மைத்துனிமார், மருமகள்மார்,
பெறாமகன்மார்.

தொல்புரம் மத்தி,
சுழிபுரம். (10627)

## கண்ணீர் அஞ்சலி

புலோலி தெற்கு மனோன்மணி அம்பாள் ஆலயத்தில்
நீண்டகாலமாக பூஜகர்களாக இருந்த
திரு.பிரேமச்சந்திரக்குருக்கள், ரவீந்திரசர்மா
ஆகியோரின் தந்தையாரான

### அமரர் அண்ணாச்சாமிஐயர்

அவர்கள் கடந்த 21.11.2002 அன்று காலமானதையிட்டு அவரின் பிரிவுத்துயரில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரை இழந்து தவிக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய
தருமகர்த்தா சபையினர்,
இளைஞர் தொண்டர் சபையினர்
மற்றும் பொதுமக்கள்.

புலோலி தெற்கு,
புலோலி. (10933)

உ
ஓம் ஸ்ரீ சாயிராம்

## ஐந்தாம் ஆண்டு இதய அஞ்சலி



வையகத்தில் 14-12-1917
தெய்வீகத்துள் 20-11-1997

### அமரர் சின்னத்தம்பி சரவணமுத்து

(ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும்
சமய, சமூக சேவையாளரும்)

திதி: அபரபக்க சஷ்டி

எம் சிந்தை நிறைந்த ஐயா!

அழகன் முருகனின் திருநாமம் கொண்ட சரவணமுத்து ஐயா, அவர்களே

நீங்கள் சைவத் தமிழ் "முத்து" ஐயா ஐயாவே!

நீங்கள் நிரப்பமுடியாத வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளீர்கள். இது உண்மை உண்மை ஐயா!

உங்கள் சேவைகளை சமய, தமிழ்ப் பணிகளை எழுத்தில் எழுதமுடியாது.

ஐயா! உங்களின் சமயச் சொற்பெருக்கு, புராண விரிவுரைகள் ஆற்றும் அந்தக் கோலத்தை மீண்டும் ஒரு தடவை நினைத்துப் பார்க்கும்போது எம் நெஞ்சம் ஒருகணம் நெகிழ்கின்றது. சைவத் தமிழ் உலகு இங்கே ஒரு நல்ல ஆசானை, நல்ல தமிழ் அறிஞரை, நல்ல ஒரு சமயச் சொற்பொழிவாளரை, இழந்து தவிக்கின்றது. எல்லோரின் உள்ளங்களிலும் நிறைந்த பெருந்தகை ஐயா நீங்கள் இறைவனிடம் சென்று விட்டீர்கள். ஆனால், இங்கே ஈடுசெய்யமுடியாத இழப்பாகி விட்டதே.

எமது தந்தையாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"குமரபுரி",
கைதடி வடக்கு. (10915)
சாயி சரவணமுத்து
குடும்பத்தினர்.

உதயன்

## இன்று ஆரம்பமாகும் ஒஸ்லோ கூட்டம்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம், நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நோர்வே அரசின் அனுசரணையுடன் இன்று நடக்கிறது.

இது உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் என்றாலும் உண்மையில் சமாதான ஆதரவுக் கூட்டமாகவே நடைபெறுகிறது.

இலங்கைக்கு உதவி என்றால் அதில் சர்வ தேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பங்கும் பணியும் மிகவும் அதிகம்.

இன்று நடைபெறும் கூட்டத்தில் இந்த முக்கிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவில்லை.

இந்த அமைப்புக்களின் பங்குதாரர்களான அபிவிருத்தி அடைந்த நாடுகளின் பிரதிநிதிகள் மட்டுமே கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

ஆகவே, வடக்கு - கிழக்கின் மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்பு முதலான அவசரத் தேவைகளுக்கு எவ்வளவு நிதி உதவி வழங்குவது என்று இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்படமாட்டாது.

அடுத்த வருடம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலேயே அது பற்றித் திட்டவட்டமாக முடிவு செய்து அறிவிக்கப்படும்; இந்தக் கூட்டத்தில் அவசர நிதி ஏதாவது வழங்குவது பற்றி அறிவிக்கப்படலாம். அவ்வளவுதான்.

இவற்றையெல்லாம் நன்கு அறிந்து வைத்திருந்ததால்தான் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடந்த வாரம் அமைச்சரவை முடிவுகளை அறிவித்தபோது இந்தக் கூட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், "இங்கே பணக்கணக்கைப் பார்க்கமுடியாது. கிடைக்கும் பணத்தைவிட உதவிவழங்கும் நாடுகள் இலங்கை மீது காட்டும் அக்கறையும் ஆர்வமும் சமாதான முயற்சிக்குத்தரும் ஆதரவும்தான் முக்கியம்" என்றார்.

இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு முதற்கண் சர்வதேச நாடுகளின் முழு ஆதரவைப் பெற்றுக்கொள்ளவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தே சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணை வழங்கும் நோர்வே அரசு, இன்றைய கூட்டத்தை விசேடமாக ஏற்பாடு செய்திருக்கிறது.

கூட்டத்தில் கலந்துகொள்ளும் இலங்கைக் குழுவின் உறுப்பினர்களில் முக்கியமானவர்களில் ஒருவரான அமைச்சர் மிலிந்த மொறகொட இன்றைய கூட்டம்பற்றி பயனுள்ள மேலும் பல தகவல்களைத் தந்திருக்கிறார்.

நோர்வேக் கூட்டச் செய்திகளைச் சேகரிப்பதற்காக 'சுடர்ஒளி', 'உதயன்' பத்திரிகைகளின் பிரதிநிதியாகச் சென்றுள்ள ந.வித்தியாதரன், கட்டுநாயக்காவிலிருந்து பிரயாணம் செய்த விமானத்திலேயே அமைச்சர் மிலிந்த மொறகொடவும் பிரயாணம் செய்தார்.

விமானத்தில் வைத்து 'சுடர்ஒளி', 'உதயன்' பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் இன்றைய கூட்டத்தின் நோக்கம் பற்றியும் அதன் அவசியத் தேவை பற்றியும் மிலிந்த மொறகொட விளக்கினார்.

"அடுத்த வருடம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில்தான் உதவித் தொகைகள் பற்றி முடிவு செய்து திட்டவட்டமாக அறிவிக்கப்படும் என்றால் இப்போது இந்தக் கூட்டம் ஏன் என்ற கேள்வி எழத்தான் செய்யும்.

"தற்போதைய சமாதான முயற்சிகளில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே காணப்பட்டுள்ள இணக்கத்தைச் சர்வதேச மயப்படுத்தி, அதைச் சர்வதேச அரசியல் இணக்கமாக்கவேண்டிய அவசரத் தேவை இருக்கிறது. அந்தத் தேவையை நிறைவேற்றுவதன் மூலம் சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்த முடியும்.

"சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச இணக்கத்தை வெளிப்படுத்துவதற்கு ஜப்பானில் கூட்டம் நடைபெறும்வரை காத்திருக்கமுடியாது. அதனால்தான் அந்தக் கூட்டத்திற்கு முன்னர் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது" என்றார் மிலிந்த மொறகொட.

இந்தச் சர்வதேச கூட்டத்தில் புலிகளும் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவதால் வடக்கு - கிழக்குத் தேவைகளை உலக நாடுகளுக்குச் சரிவர எடுத்துக்கூறி, வேண்டியளவு உதவிகளைப் பெற வாய்ப்புக்கிடைத்திருக்கிறது. தவிரவும், தாங்கள்தான் தமிழ் பேசும் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை உலகிற்கு உணர்த்தவும் சர்வதேச அங்கீகாரம் பெறவும் அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

கூட்டம் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகின்றோம்; அமையவேண்டும் என்று விரும்புகின்றோம்.

# மாவீரரின் பெற்றோரைக் கௌரவிக்க நாளைமறுதினம் விசேட ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,நவ.25

மாவீரர் தினத்தில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வுகளை யாழ்.மாவட்ட அரசியல்துறையின் மாவீரர் பணிமனை ஏற்பாடுகளை செய்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்தி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

மாவீரர் நாள் நிகழ்வுகள் இன்று 25ஆம் திகதி காலை 8 மணிக்கு தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகும். இன்றும் நாளையும் ஊர்கள்தோறும் சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் ரீதியாக மாவீரரின் பெற்றோர் மற்றும் உரித்துடையோர் கௌரவிப்பு இடம் பெறும்.

மாவீரர் தினமான நாளைமறுதினம் புதன்கிழமை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய் சைவத்தமிழ் வித்தியாலயம், உடுப்பிட்டி அப்பா பாடசாலை (தாமோதர வித்தியாசாலை), எள்ளங்குளம், கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், சாட்டி தேவாலய துயிலும் இல்லம் அருகில் ஆகிய இடங்களில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

துயிலும் இல்லம் செல்பவர்களுக்கான வாகன ஒழுங்குகள் அவ்வப்பிரதேசத்தின் முக்கியமான இடங்களில் ஒழுங்கு செய்யப்படும். ஏனைய மாவட்டங்களில் உள்ள (வன்னி) துயிலும் இல்லங்களுக்குச் செல்லுகின்ற பெற்றோர், உரித்துடையோர்களுக்கான வாகனங்கள் ஒவ்வொரு கோட்ட அரசியல்துறை செயலகங்களின் முன்பாகவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அந்த இடங்கள் வருமாறு:-

- ★ யாழ்., நல்லூர் செயலகம் - வைமன் வீதி, நல்லூர்.
- ★ வலி.மேற்கு - சீரணி வீதி, சண்டிலிப்பாய்.
- ★ வலி.கிழக்கு - பருத்தித்துறை வீதி, நீர்வேலி.
- ★ வடமராட்சி - மத்திய கல்லூரி வீதி, வதிரி, நெல்லியடி.
- ★ தென்மராட்சி - ஏ-9 பிரதான சாலை, சங்கத்தானை.
- ★ தீவகம் - பெருங்குளம் கோயில், வேலணை.

வெளிமாவட்டங்களில் இருந்து (வன்னி) யாழ்.மாவட்டத்தின் துயிலும் இல்லங்களுக்கு வரும் பெற்றோர் உரித்துடையோருக்கு கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை, எள்ளங்குளம் அப்பா பாடசாலை, உடுப்பிட்டி. கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் தங்குமிட வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவீரருடைய பெற்றோர், உரித்துடையோர் பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் மாவீரர் துயிலும் இல்லங்களினுள்ளும் அழைத்துச் செல்லப்படுவர். அதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் மாவீரர் நினைவுரை இடம்பெறும். நினைவுரை நிறைவுபெற்றதும் சரியாக 6.05 மணிக்கு (பழைய நேரம்) அனைத்து துயிலும் இல்லங்களிலும் வழிபாட்டுத்தலங்களிலும் ஒருமணித்துளிநேரம் மணி ஒலிக்கப்படும்.

உயிர்க்காப்புப் பணியில் ஈடுபடுகின்ற ஊர்திகள் தவிர ஏனைய அனைத்து ஊர்திகளும் நிகழ்வு தொடங்குவதற்கு ஏற்றவகையில் நிறுத்தப்பட்டு அமைதி பேணப்பட வேண்டும். மாவீரர்களுக்கான நினைவொலி நிறுத்தப்பட்டவுடன் சரியாக 6.06 மணிக்கு(பழைய நேரம்) மாவீரர்களுக்காக ஒரு மணித்துளி நேரம் அகவணக்கம் செலுத்தப்படும். இந்நேரம் துயிலும் இல்லங்களிலும் ஏனைய மக்களின் வாழ்விடங்களிலும் இருக்கும் தமிழீழ மக்கள் அனைவரும் எழுந்து நின்று மாவீரர்களை நினைவில் நிறுத்தி அகவணக்கம் செலுத்துதல் வேண்டும். அகவணக்கம் நிறைவுற்றதும் சரியாக 6.07 மணிக்கு (பழைய நேரம்) ஈகச்சுடர் ஏற்றப்படும் இவ்வேளை வீடுகள், ஆலயங்கள் பொது இடங்களில் அனைத்து மக்களும் சுடர் ஏற்றி மாவீரரை நினைவுகூருவர். மாவீரர் துயிலும் இல்லங்களில் 1995ஆம் ஆண்டின் பின் மாவீரரானவர்களின் கல்லறைகள் நினைவுக்கற்கள் இல்லாத மாவீரர்களின் பெற்றோர் உரிதுடையோர்களுக்கான பொதுச்சுடர் துயிலும் இல்லத்தின் பிறிதோர் இடத்தில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

மாவீரர்களின் நினைவாக மாவீரரின் கல்லறை அருகே வைக்கப்பட்டுள்ள பழமரக்கன்றுகளை மாவீரரின் பெற்றோர், உரித்துடையோர் எடுத்துச்சென்று இந்நாளின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் வீடுகளில் நடுகைசெய்து பாது காக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- என்றுள்ளது. (ஓ)

## உடன்வந்த தங்கையைத் தவறவிட்ட
# புதுக்குடியிருப்புச் சிறுவன் கொடிகாமத்தில் பரிதவிப்பு!

### தெரிந்தவர் தொடர்புகொள்ளவும்

கொடிகாமம்,நவ.25

புதுக்குடியிருப்பில் இருந்து தாயைத் தேடி தங்கையுடன் கால் நடையாகப் புறப்பட்ட சிறுவன், தங்கையைத் தவறவிட்ட நிலையில் கொடிகாமம் நகரப் பகுதியில் பரிதவித்து நின்றான். இச்சிறுவனைப் பொதுமக்கள் கூட்டிச் சென்று கொடிகாமம் அரசியல் பணிமனையில் ஒப்படைத்துள்ளனர்.

தெய்வேந்திரம் சுதாகர் (வயது 14) என்ற அச்சிறுவன் தெய்வேந்திரம் கௌசிகா (வயது 11) என்ற தனது தங்கையுடன் தாயைத் தேடிவந்ததாகத் தெரிவித்துள்ளான்.

மேலும் அச்சிறுவன் தெரிவித்ததாவது:-

'எனது அப்பா பெயர் பிள்ளையார் தெய்வேந்திரம். சுமார் 3 ஆண்டுகளின் முன்னர் வன்னியில் இருந்து அவர் இந்தியா சென்றார். வழியில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவந்தது. அதன் பின்னர் அப்பா திரும்பிவரவேயில்லை.

கடந்த வருடம் எனது இரு தம்பிகளுடன் அம்மா வத்திரானில் உள்ள சொந்த வீட்டில் குடியமர வந்தார். நானும் எனது மற்றைய சகோதரங்களும் அம்மாவின் தாயாருடன் (அம்மம்மா) புதுக்குடியிருப்பில் தங்கியிருந்தோம். வத்திரானுக்கு வந்த அம்மாவும் சகோதரர்களும் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை.

எம்மால் புதுக்குடியிருப்பில் இருக்கமுடியவில்லை. அதனால் எனது தங்கையுடன் அம்மாவைத் தேடி நடந்து வந்தேன். சிறிது தூரம் நடந்ததும் தன்னால் நடக்கமுடியவில்லை என்று தங்கை அழுதாள். யாழ்ப்பாணம் நோக்கி எம்.டி.90 மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த அண்ணன் ஒருவருடன் தங்கையை ஏற்றி அனுப்பினேன். பின்னர் வந்த மற்றொரு மோட்டார் சைக்கிளில் நான் ஏறிவந்தேன். என்னை ஏற்றி வந்த அண்ணா இங்கு இறக்கி விட்டுச் சென்றார்.

எனக்கோ தங்கைக்கோ எமது வத்திரான் வீட்டுக்குச் செல்ல வழிதெரியாது. இப்போது தங்கையையும் காணவில்லை.'

- இவ்வாறு சிறுவன் தெரிவித்தான்.

சிறுவனின் முகத்தில் சில காயங்கள் காணப்பட்டன. இவை அம்மம்மா அடித்ததால் ஏற்பட்டவை என்று அச்சிறுவன் கூறியுள்ளான்.

இச்சிறுவனைத் தெரிந்தவர்களோ அல்லது உறவினரோ கொடிகாமம் அரசியல்துறைப் பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஒ-74)

## கோப்பாய்ப் பகுதியில்
# காசநோயாளர் கழிவுப் பொருள்கள் குடிமனைகளின் வளவுகளுக்குள்
### பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிப்பு

கோப்பாய்,நவ.24

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவமனையில் இயங்கிவரும் காச நோய்ச் சிகிச்சைப் பிரிவில் தங்கி சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்கள் கட்டுப்பாடுகள் இன்றி ஆஸ்பத்திரி சுற்றாடலில் நடமாடி வருகின்றனர் என பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக மேற்படி சிகிச்சைப் பிரிவுக்கு சமீபமாகவுள்ள குடிமனைகளின் வளவுகளினுள் குறித்த நோயாளர்கள் பயன்படுத்திய பாய, தலையணை, படுக்கை விரிப்புக்கள வீசப்படுவதாகவும் - கூறப்பட்டது.

மேற்படி நோயாளர்களின் கழிவுப் பொருள்களைத் தாமே எடுத்து அப்புறப்படுத்த வேண்டிய அவலநிலை ஏற்பட்டுள்ளதாகவும் - இதனால் தமக்கு நோய்த் தொற்றுக்கு இலக்காகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் - பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதனால், மேற்படி சிகிச்சைப் பிரிவை வேறு இடத்திற்கு மாற்றி உதவும்படி கடந்த பல மாதங்களாக பல்வேறு தரப்பினரிடமும் தாம் கோரிக்கை விடுத்ததாகவும் -

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உறுதிமொழி தரும் தரப்பினர் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் - பொதுமக்கள் தெரிவித்தனர். (எ-72)

**நாளை**

கார்த்திகை 10<br>
செவ்வாய்க்கிழமை<br>
(26.11.2002)<br>
திதி : ஷஷ்டி<br>
முற்பகல் 8.21 வரை<br>
நட்சத்திரம்: ஆயிலியம்<br>
முன்னிரவு 11.05 வரை.<br>
கரிநாள்.<br>
சுபநேரம் : 10.42 - 12.12<br>
ராகுகாலம் : 3.12 - 4.42<br>
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

நீ எதைச் செய்தாலும் அதன் பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அர்ப்பணித்துவிடு.

## வாரத்தில் மூன்று தினங்கள்
# பண்டத்தரிப்பு, இளவாலை ஆஸ்பத்திரிகள் இயங்கும்

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களிலும் -

இளவாலை அரசினர் வைத்தியசாலை செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களிலும் - வெளி நோயாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக இவ்விருவைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரியான டாக்டர் சி.கணேசலிங்கம் அறிவித்துள்ளார்.

இதுவரைகாலமும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் முற்பகலிலும், இளவாலை அரசினர் வைத்தியசாலையில் பிற்பகலிலும் இவர் பணிபுரிந்து வந்தார்.

யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரின் பணிப்புரைக்கிணங்க வாரத்தில் இவ்வாறு முதல் மூன்று தினங்கள் பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையிலும், மூன்று தினங்கள் இளவாலை அரசினர் வைத்தியசாலையிலும் இவர் நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கி வருகின்றார்.

இதேவேளை - பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் புதிதாக நிறுவப்பட்ட ஆண், பெண் வார்ட்டுகளும் மற்றும் பிரசவ விடுதியும் கட்டட வேலைகள் பூர்த்தியாகி ஒரு வருட காலமாகியும் இதுவரை திறந்து வைக்கப்படவில்லை.

இப்பகுதியிலும் மற்றும் மாதகல், சில்லாலை, பெரியவிளான், வடலியடைப்பு, பிரான்பற்று ஆகிய பகுதிகளிலுமுள்ள மக்களின் நலன்கருதி மேற்படி வாட்டுக்களைத் திறந்து இயக்குவதற்கு ஆவன செய்யுமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரிடம் கடிதமூலம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளது.

(எ-135)

# சந்திரிகாவை ஓரங்கட்டும் ரணிலின் முயற்சி பிசுபிசுத்தது

**கடந்த பொதுத் தேர்தலில் மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சி அமைத்த பிரதமர் ரணிலுக்கு தனது ஆட்சியைச் செவ்வனே நடத்த - தனது திட்டங்களை நிறைவேற்ற தடையாய் இருப்பது எதிர்க்கட்சி வசமுள்ள ஜனாதிபதிப் பதவியாகும். அந்தப் பதவியை வகிக்கும் சந்திரிகாவை ஓரங்கட்ட ரணில் எடுத்த முயற்சி குறி தவறிவிட்டது. இது குறித்து ஆராய்கிறார் "ராவய" பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

## மாற்றான் தோட்டத்திலிருந்து...

நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி எதிரணியினரிடம் உள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் ஆயுள் ஒரு வருடம் பூர்த்தியான பின்னர், தேவையாயின் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்கு ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் விதத்தில் அரசு அரசமைப்பில் திருத்தம் கொண்டுவர முயன்றது. அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்பட்ட நிலையில், தேவைப்பட்ட மேலதிக வாக்குகளை பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் பெற்றுக்கொள்ளலாமென அரசு எதிர்பார்த்தது. அப்படி அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளிக்கத் தயாராக இருந்த பொ.ஐ.முன்னணி உறுப்பினர்களின் நாடாளுமன்றப் பதவியைத் தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில், மனச்சாட்சிகளின்படி வாக்களிக்கும் உரிமையையும் சட்டபூர்வமாக்குவது அரசின் திட்டமாக இருந்த போதிலும், உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அரசுக்குப் பிரச்சினையைத் தோற்றுவித்தது.

இதன்மூலம் அரசுக்கு முழுமையான பின்னடைவை ஏற்படுத்த ஜனாதிபதியால் முடியாது போயினும், மிகுந்த உறுதியான நிலையில் முயற்சியை முன்னெடுத்துச் சென்ற அரசுக்குத் தடைகளை ஏற்படுத்த அவரால் முடிந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சில அரச நிர்வாக நடவடிக்கைகள் மிக உறுதியானவையாயும் கவர்ச்சியானவையாயும் அமைந்த போதிலும், அவற்றிடையே பாரதூரமான குறைபாடுகளும் காணப்பட்டன.

எந்த ஒரு அரசின் வெற்றியும், அந்த அரசின் நிர்வாகத்தின் சுக்கானைக் கையாள்பவரின் திறமை மற்றும் நடவடிக்கை ஆகியவற்றின் வெற்றி தோல்விகளிலேயே தங்கியுள்ளது. எந்தவொரு அரசியல் பயணத்துக்கும் குறிக்கோள் ஒன்று அவசியமானதுடன், அக்குறிக்கோளை அடைவதற்கான தன்னம்பிக்கை கொண்டிருத்தலும் அவசிய தேவையாகிறது. உறுதியை வெளிப்படுத்தல் நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தப் போதுமானதல்ல. கூட்டுமுயற்சியின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் அவசியமானது.

கப்பலின் மாலுமிக்கு எப்போதும் முன்நோக்கிய பார்வை அவசியம். கப்பலின் சுக்கானை அவர் முறைப்படி கையாளவேண்டும். அதுவுமன்றி, அக்கப்பலின் மற்றெல்லாத் தொழிலாளர்களின் நடவடிக்கைகள் பற்றியும் உறுதிப்படுத்திக் கொள்ளும் திறமையும் அவர் கொண்டிருத்தல் வேண்டும். ஜனநாயக நடைமுறையின்கீழ் நடத்தப்படும் பொதுத் தேர்தலொன்றில் பொதுமக்களின் அதிக ஆதரவைப் பெறும் கட்சி அரசமைக்கும்போது, தேர்தலில் போட்டியிட்டுத் தோல்விகண்ட கட்சி எதிர்க்கட்சியாகச் செயற்படுவது வழக்கமாகும். பொதுமக்களில் எதிர்க்கட்சியை விரும்புவோரும் உள்ளனர். அரசமைக்கும் கட்சிக்குக் கிடைக்கும் பொதுமக்களின் ஆதரவும் மாற்றம் அடையக் கூடும்.

சாதாரண கப்பல் ஒன்றைச் செலுத்திச் செல்வதைவிட அரசு என்ற கப்பலைக் கையாள்வது எதிர்நீச்சல் போடுவது போன்ற சிரமமான காரியமாகும். சமுத்திரத்தில் கப்பலைச் செலுத்திச்செல்லும் மாலுமி போலன்றி, இங்கு இம்மாலுமி சிந்திக்கும் திறமைகொண்ட எலும்பு, இரத்தம், சதையாலான மனிதர்கள் கொண்ட ஜன சமுத்திரத்தில் கப்பலைச் செலுத்திச்செல்ல வேண்டிய நிலையில் உள்ளார்.

அரசுக் கப்பலைச் செலுத்திச் செல்லும் மாலுமி பொதுமக்களின் நம்பிக்கைக்குப் பொறுப்பாகும் விதத்தில் பயணத்தின் இலக்கை அடைவதற்கான நடைமுறைத் திட்டங்களும் இருத்தல்வேண்டும். பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கையில் பெருமளவான மாற்றத்தையும் சுபிட்சத்தையும் ஏற்படுத்துவதற்கான முயற்சியில் பெறுமதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு, தமது செயற்திறனை வெளிக்கொணர்வதில் வெற்றிபெறும் தலைவருக்கு மட்டுமே தமது கட்சிக்குக் கிடைக்கும் பொதுமக்களின் ஆதரவைத் தொடர்ந்து காப்பாற்றிக் கொள்ளவும், அதன் மூலம் மேலும் ஆதரவை வளர்த்துக்



கொள்ளக்கூடிய வாய்ப்பும் கிட்டுகிறது.

ஜே.ஆர்.ஜயவர்த்தனமுதல் ரணில் விக்கிரமசிங்கவரை பதவிக்கு வந்த தலைவர்கள் அடைய விரும்பிய குறிக்கோள் ஒரேவகையானவை அல்ல. வேகமான பொருளாதார முன்னேற்றமே ஜே.ஆரின் குறிக்கோளாயிருந்தது. ஏழை மக்கள் மீது பாரம் சுமத்தாத நடவடிக்கைகள்மூலம் நாட்டை முன்னேற்றமடையச் செய்வது பிரேமதாஸாவின் குறிக்கோளாய் அமைந்தது. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது சந்திரிகாவின் குறிக்கோளாக இருந்த போதிலும், அவருக்கு நாட்டின் சுபிட்சம் சம்பந்தமாக உண்மையான குறிக்கோள் இருந்ததாகத் தெரியவில்லை. இப்போது ரணிலினது பிரதான குறிக்கோளும் நாட்டின் சமாதானமாகவே அமைகின்றது.

இத்தலைவர்கள் நால்வருக்கும் விளையாடுவதற்காக அமைக்கப்பட்ட மைதானங்கள் வெவ்வேறு வகையான அடிப்படையில் அமைந்தன. மிகவும் சிரமமான, சாதகமற்ற மைதானமே ரணிலுக்கு வாய்த்ததெனக் கூறமுடியும்.

ஜே.ஆருக்கு நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியுடன் மேலதிகமாக நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மைப் பலமும் இருந்தது. பிரேமதாஸவுக்கும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியோடு மேலதிகமாக, நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலம் இருந்தது. சந்திரிகாவுக்குக்கூட நாடாளுமன்றத்தின் குறைந்த பெரும்பான்மைப் பலமும் நிறைவேற்று ஜனாதிபதி பதவியும் இருந்தது. ஆனால், ரணிலுக்கு நாடாளுமன்றத்தில் குறைந்த பெரும்பான்மைப் பலமே கிடைத்தது. அச்சிறுபெரும்பான்மைப் பலம்கூட அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் மூலமாக அல்லாமல் கூட்டுக் கட்சிகளின் மூலமாகவே கிடைத்துள்ளது. அதேசமயம் நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிகூட எதிரணியினர் கையில் உள்ளது.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியால் கையாளப்பட வேண்டிய விடயங்களுள் ஒன்றெனக் கருதப்படக்கூடிய சமாதானத்தை எட்டுதல் என்பதையே தனது பிரதான குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார். அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தம் இடம்பெற்ற காரணத்தாலேயே சமாதானம் தேவைப்படுகிறது. சட்டப்படி முப்படைகளுக்குக் கட்டளையிடும் அதிகாரம் பிரதமருக்கல்ல, ஜனாதிபதிக்கே உண்டு. இந்த நிலைமையின்படி தாம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளைத் திட்டமிடும்போது, தமக்குரிய அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையையும், தமது குறிக்கோளை நிறைவேற்ற முயலும் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி விரும்பினால் பாதிப்பு ஏற்படுத்தமுடியும் என்பதையும் ரணில் சிந்தித்துப் பார்க்கவேண்டியுள்ளது.

தமது நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் ஏற்படுத்த நினைத்திருக்கும் எதிரணித் தலைவர் (ஜனாதிபதி) பற்றி சரியான மதிப்பீடு செய்வதும் அவருக்குப் பொருத்தமான கொள்கையைத் தயாரிக்கும்போது அடுத்துக் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை மேலும் முக்கியமான விடயங்களாகும். ஜே.ஆரின் பின்னர் பதவிக்கு வந்த தலைவர்களிடையே சந்திரிகாவையே தன்னிச்சைப்படி செயலாற்றிய தலைவராகக் கருத இயலும். ஜே.ஆர்.கூட தன்னிச்சையாக நடந்துகொண்ட மனிதர்தான். ஆயினும், ஜே.ஆர். வாழ்ந்த காலத்துக்கும் சந்திரிகா வாழ்ந்த காலகட்டத்துக்கும் பெரும் அளவிலான வேறுபாடு உண்டு. உலகம் பிரச்சினைகளை எதிர்நோக்க ஆரம்பித்த காலகட்டத்திலேயே ஜே.ஆர். அரசியலில் பதவி வகித்தார். அக்காலகட்டத்தில் ஸ்ரீலங்காவின் செயற்பாடுகளில் இந்தியா மட்டுமே அக்கறை செலுத்திவந்தது. இன்னொரு விதத்தில் நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மைப் பலத்தைத் தம் கைகளில் வைத்துக் கொண்டே ஜே.ஆர்.தாம் நினைத்தவாறு செயற்பட்டார். ஆனால், உலக முழுமையும் பிரச்சினைகள் மயமாகிவிட்ட காலகட்டத்திலேயே சந்திரிகா ஆட்சி செய்ய நேர்ந்தது. ஸ்ரீலங்காவின் பிரச்சினைகள் இந்தியாவினது மட்டுமல்ல, முழு உலகத்தின் கவனத்தை ஈர்த்துக்கொண்டது. இன்னொரு வகையில் சந்திரிகா, ஜே.ஆர் போன்று நடந்துகொண்டவேளையில் நாடாளுமன்றத்தில் அவர் ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மைப் பலம் கொண்டிருக்கவில்லை. ஒரேயொரு வாக்குமூலம் பெரும்பான்மைப் பலம் கொண்டிருந்த வேளையிலேயே அவர் அவ்வாறு நடந்துகொண்டார்.

ஜனநாயக மரபுகளை மீறும் விடயத்தில் சந்திரிகா ஜனாதிபதி ஜே.ஆரை மிஞ்சிவிட்டார் என்றே கூற வேண்டும். அவர் நாட்டை நிர்வகிக்கும் கலையை அறியாது இருந்த போது, அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வது மற்றும் பெற்றுக்கொண்ட அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக தேவைப்படும் எதையும் மேற்கொள்ளும் திறமை கொண்ட தலைவியாகவும் இருந்தார். தனது கைகள் சேற்றிலும் இரத்தத்திலும் தோய்ந்துள்ளன என்பதை அவர் அறிந்திருந்தபோதிலும் அவர் தமது பாதுகாப்பு என்ற அதிகாரத்தின் ஊடாக அவற்றை விலக்கிக்கொள்ளத் தெரிந்திருந்தார். உளரீதியாகவும் அவர் அசாதாரண நிலையிலேயே உள்ளார். ஒரே சமயத்தில் நாட்டின் தலைவி போலவும், எதிர்க் கட்சித் தலைவி போலவும் தன்னைக் காட்டிக் கொள்கிறார்.

இவை அனைத்தின்படியும் சந்திரிகா போன்ற ஒரு தலைவியுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதிலுள்ள கஷ்டங்களைப் புரிந்துகொண்டு அதற்குப் பொருத்தமான - ஜனநாயக மரபுகளுக்கு ஏற்புடைய வழிமுறைகளை பிரதமர் ரணில் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது.

பொதுமக்களின் வாக்குப் பலத்துக்கே ஜனாதிபதி சந்திரிகா பயப்பட்டார். ஐக்கிய தேசியக்கட்சி பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று பதவிக்கு வந்தாலும், நிறைவேற்று அதிகாரம் தன்வசமே இருப்பதால் தான் விரும்பும் விதத்திலேயே அரசு அமைக்கப்படுமென சந்திரிகா வாயடித்துக்கொண்டார். ஆனால் பொதுத்தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் அவர் தனது வாயடிப்பைத் திடீரென நிறுத்தியதோடு ஓடி பின்னோக்கி வைக்கும் வழக்கத்தை அனுசரிக்க ஆரம்பித்தார். பொதுமக்களின் ஆதரவுடன் மட்டுமே சந்திரிகா நிர்வாகத்தை நடத்திச்செல்ல இயலும் எனவும் பொதுமக்கள் அவருக்கு எதிராக வாக்களித்திருந்த அச்சமயத்தில், ரணில் தனது ஆட்சிக்கு இடையூறாக அமைந்துள்ள நடைமுறைக்கு திருத்தத்தை மேற்கொள்ள சந்திரிகாவின் இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்த ஒரேயொரு மற்றும் மிக நல்ல சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்திக் கொள்ள ரணில் தவறிவிட்டார்.

அத்தகைய முக்கிய சந்தர்ப்பத்தில் சந்திரிகாவுடன் தொடர்புகளை மேற்கொண்டு பொதுமக்களிடமிருந்து தமக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளதால், தாம் முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் தடைகளை நீக்குவதற்கு அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ள ஒத்துழைப்பு வழங்குமாறு சந்திரிகாவை ரணில் கேட்டுக்கொண்டிருந்திருப்பாரேயாகில் அன்றேல் அரசமைப்புத் திருத்த மசோதாவுக்கு ஆதரவளித்தால் சந்திரிகா தனது பதவிக்காலம் முழுவதும் தொடர்வதற்கு ஒத்துழைப்பதாக ரணில் உறுதியளித்திருந்தால் சந்திரிகா இத்தகைய அரசமைப்புத் திருத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிக்க முன்வந்திருக்கக்கூடும். அதற்கு ஜனாதிபதி ஒத்துழைக்க மறுக்குமிடத்து, தமக்குப் பொதுமக்களிடமிருந்து கிடைத்த ஆணைப்படி மேற்கொண்டு தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற முயலும் வகையில் பொதுமக்கள் மீதான சுமையைக் குறைக்கும் நடவடிக்கைகள்மூலம், அந்நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வற்புறுத்தவும், அவ்வாறான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்காது ஜனாதிபதி முரட்டுத்தனமான நடவடிக்கைகளைத் தேர்ந்தெடுப்பாராயின், அவரைப் பதவியினின்று விரட்டிவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் ரணிலுக்கு இருந்தன.

அரச நிர்வாகத்தில் சந்தர்ப்பங்கள் பெறுமதிமிக்கவை. ஆனால் கட்சிசார்பாக வழங்கப்பட்ட பொதுமக்களின் ஆதரவை தமக்குக் கிடைத்த விசேட வாய்ப்பாகப் பயன்படுத்தி, எதிர்காலத்தில் தமது நிர்வாகத்துக்கு ஏற்படவுள்ள முட்டுக்கட்டைகளைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள ரணில் விக்கிரமசிங்க அந்த வேளையில் தவறிவிட்டார். அரசின் தொடரவேண்டிய மீதிப் பயணத்துக்கு அவசியமான உடன்பாடுகளை ஏற்படுத்தி, ஜனாதிபதியைக் குறிப்பிட்ட ஒரு அளவுக்கோ, அல்லது நிர்வாகத்துக்கு அடங்கிச் செல்லும் வகைக்கோ கொண்டுவருவதற்கு தமக்குக் கிடைத்த சந்தர்ப்பமான பொதுமக்களது ஆதரவு நிலையைப் பயன்படுத்தியிருக்கவேண்டும். அவர் அதைவிடுத்து அச்சமயத்தில் அவ்வணுகுமுறையைக் கைக்கொள்ளாது தவறான முடிவெடுத்து பொதுசன ஆதரவை மலினப்படுத்தும் வகையில் நடவடிக்கையில் இறங்கி சிரமமான வழியில் கருமமாற்றியதன்மூலம் தன் கையைத் தானே சுட்டுக்கொண்டார்.

இத்தவறைத் திருத்திக்கொள்வதற்கு பெருமளவிலான சட்டைச் செலுத்தவேண்டி ஏற்பட்டபோதிலும், இத்தவறான நடவடிக்கை கற்றுத்தந்த பாடத்தைச் சரியாகப் புரிந்துகொண்டால் மாத்திரமே மீண்டும் இவ்வகைப் பாரதூரமான தவறுகள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளஇயலும்.

சமாதானத்தை அடையும் முயற்சியில் காட்டும் அவதானம், விசுவாசம் ஆகியவற்றினிடையே இது விடயத்தில் எடுக்கப்படும் தவறான தீர்மானங்களால் உருவாகும் உறுதியின்மை ஆகியவை ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் முக்கிய காரணமாகக் கருதமுடியும். ஆனால் இது விடயத்தில் முன்னர் இடம்பெற்ற தவறுகள் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

ரணில் விக்கிரமசிங்க நடித்த எதிர்க்கட்சித் தலைவர் பாத்திரம் கனதியானதல்ல. ஆனால் பிரதமர் பாத்திரம் கனதிமிக்கது. தேவையான சமயத்தில் மட்டும் தமது கருத்தை வெளிப்படுத்தி, தான் சரியானது என நம்புவதை செயற்படுத்தி, அவ்வேளை எதிர்ப்படும் எதிர்ப்புக்களுக்கு பயமின்றி, சரியான, உறுதியான முடிவு மேற்கொள்ளத் தயாரான தலைவரெனத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளபோதும், தமது அணியினரின் ஆதரவைத் தேடி பயன்படுத்திக்கொள்ளும் அணித் தலைவராக இதுவரை ரணில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவில்லை.

தமது அணியைச் சேர்ந்தவர்களில்



திறமைசாலிகளை இனங்கண்டு, அவர்களது திறமையைப் பயன்படுத்திக் கொள்ளும்வகையில் அவர்களுக்குச் சந்தர்ப்பமளித்து இயங்கிய அணித் தலைவராக ஜே.ஆரைக் குறிப்பிட முடியும்.


ஐக்கிய தேசியக் கட்சியின் ஆரம்பகாலம்முதல் அக்கட்சிக்குள் தனது திறமையை வெளிப்படுத்தியதோடு, ஐ.தே.கட்சி அரசு ஆட்சியிலிருந்த சமயங்களில் பொறுப்புள்ள பதவி வகித்ததோடு, அப்பதவிகள் மூலமாக தன் திறமையை வெளிப்படுத்திய ஜே.ஆர். அத்திறமையின்மூலமே அரசின் தலைவராகவும் ஆனார். அரசின் தலைவராக அவர் நியமனமான சமயம் அவரது வயது 71. அவ்வணியிலிருந்த மனதால் இளமையானவராகக் கணிக்கப்பட்டதோடு, அவரிடம் காணப்பட்ட செயற்திறனும் கட்சியினிடையே அவரது தலைமைத்துவப் பண்பும், கட்சியில் அவரது செல்வாக்குக்கு சவால்விடும் அளவுக்கு வேறு எவராலும் முன்னிலை வகிக்க முடியவில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறையை அறிமுகப்படுத்திய முன்னோடியான ஜே.ஆர் ஜனாதிபதி பிரேமதாஸ மற்றும் சந்திரிகா போன்று ஜனாதிபதியின் செயலகம் காரியாலயத்தை அமைத்து அதனது ஆலோசனைகளின்படி ஆட்சியை நடைமுறைப்படுத்தி வெற்றிகண்ட தலைவர்களாக விளங்கவில்லை. அவர் ஆலோசனைச் சபையாக செயற்படுத்தியது தனது அமைச்சரவையையே. ஜே. ஆர். தனது அமைச்சரவையுடன் நிர்வாகம் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்கள் பற்றியும் கலந்துரையாடும் பழக்கத்தைக் கைக்கொண்டார். அமைச்சரவை உறுப்பினர் யாவருக்கும் சுதந்திரமாகத் தமது கருத்துக்களைத் தெரிவிக்க இடமளித்தார். அவர்களிடையே அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து அவர்கள் சுயமாகச் செயற்படுவதைக் கண்காணித்தார். இதனால் அவர்களிடம் காணப்பட்ட திறமையை அவர்கள் செயலில் காட்டுவதற்கு சந்தர்ப்பம் வாய்த்தது. பிரேமதாஸா, ரொனி டிமெல், லலித் அத்துலத்முதலி மற்றும் காமினி திசாநாயக்கா ஆகிய நால்வரிடமும் திறனுடன் செயற்படும் தன்மைகள் காணப்பட்டன. ஜே.ஆர். தனது குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கான முயற்சியில் செயற்பட வேண்டியவை சம்பந்தமாக அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமது அமைச்சரவைச் சகாக்களுக்குத் தெரியப்படுத்தும் வழக்கத்தைக் கைக்கொண்டுவந்தார்.

இவ்விடயத்தில் பிரேமதாஸாவின் நடவடிக்கைகள் வேறொரு வகையில் அமைந்தன. பிரேமதாஸ அமைச்சரவை மூலமாகவன்றி, தேர்ந்தெடுத்த சில அரச அதிகாரிகள் மூலமாகவே தீர்மானங்களை மேற்கொண்டதுடன், அவற்றை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கை மேற்கொண்டார்.

இது விடயத்தில் சந்திரிகாவின் அணுகுமுறை [illegible] பெறும்

(9ஆம் பக்கம் பார்க்க)

தமிழில்: வீயெஸ்ரி




கிழக்கு மாகாணத்தில் முதலாவது தமிழீழ நீதிமன்றம் பட்டிப்பளையில் நேற்றுமுன்தினம் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. புலிகளின் நீதி, நிர்வாகத்துறை பிரிவுப் பொறுப்பாளர் பரா பெயர்ப் பலகையைத் திறந்துவைப்பதையும் - நீதிமன்றத்தின் முதல் அமர்வையும் படங்களில் காணலாம்.

### கண்ணிகளை அகற்றும் பணி குறித்து

# கனேடியத் தூதருடன் தமிழ்ச்செல்வன் பேச்சு

வடக்கு - கிழக்கில் மக்கள் மீளக் குடியமர வசதியாக கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் கனடா ஈடுபடும் வாய்ப்புக் குறித்து கனேடிய தூதர் தலைமையிலான குழு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் ஆராய்ந்துள்ளது.

இலங்கைக்கான கனேடியத் தூதர் வலிரேமன் தலைமையிலான குழுவே தமிழ்ச்செல்வனை நேற்றுமுன்தினம் காலை கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

இந்தக் குழுவின் கண்ணிவெடி அகற்றும் அதிகாரிகளான ஜெனரல் மொரிஸ் பரிஸ் மற்றும் இரு கேணல்கள் உட்பட நான்கு பேரும் அடங்கியிருந்தனர்.

கனேடிய தூதரக அரசியல் ஆலோசகர் போல் ஹரோயு, அபிவிருத்தி ஆலோசகர் ஜோ.வில்லியம் ஆகியோரும் தூதருடன் வந்திருந்தனர்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் கனடா ஈடுபடும் வாய்ப்புக் குறித்தும்-

சமாதான முயற்சி, அரசியல் நிலை ஆகியன குறித்தும் - இப்பேச்சில் ஆராயப்பட்டது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்தவர்களும் இதில் கலந்துகொண்டனர். (ம-3-12-164)

# சுத்திகரிப்புத் தொழிலாளரின் போராட்டம்: பலாலி படைத் தலைமையகம் விளக்கம்

'போராட்டம் வேண்டாம்; வெளியேறி விடுகிறோம்' - என்ற தலைப்பில் கடந்த 22.11.2002 உதயனின் 5ஆம் பக்கத்தில் வெளியாகிய -

சாவகச்சேரி நகரசபை சுத்திகரிப்புத் தொழிலாளர்களின் விடுதி விவகாரம் பற்றிய செய்தி தொடர்பாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையக கட்டளை அதிகாரி சார்பில் விளக்கக் குறிப்பு ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மேற்படி செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி செய்தி தொடர்பாக 521 ஆவது படையணி கட்டளை அதிகாரி அரசாங்க விடுதிகள் சிவில் மக்களுக்குப் பெற்றுத் தருவதாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தொழிலாளர்களிடமோ, அல்லது எந்தவொரு நிறுவனத்திடமும் தெரிவிக்கவில்லை என சுட்டிக்காட்டுவதோடு 2002.11.20 ஆம் திகதி மாலை 521ஆவது படையணித் தலைலமையகத்தின் கட்டளை அதிகாரி, 11 ஆவது கஜபா ரெஜிமென்ட் கட்டளை அதிகாரியுடன் அப்பகுதியில் பாதுகாப்பு வலயம் மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக கண்டறிவதற்காகவே அப்பகுதியில் விஜயம் செய்தார். ஆகவே தங்களது பத்திரிகையில் பிரசுரமான செய்தி முற்றிலும் தவறானது என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## நெடுந்தீவுக்கு படகுச் சேவை

ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் கோயிலடி துறையில் இருந்து நெடுந்தீவுக்கு இன்று படகுச் சேவை ஒன்றை ஆரம்பிக்கப்போவதாக ஈ.பி.டி.பி. அறிவித்துள்ளது. நெடுந்தீவுக்கான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளதை அடுத்து இந்தச் சேவையை ஆரம்பிக்கப்போவதாக அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - நெடுந்தீவு பிரதேசசபையில் பணிபுரியும் சகல ஊழியர்களையும் உடன் வேலைக்குத் திரும்பும்படி அந்தச் சபையின் உப - தலைவர் ஜெயகாந்தன் கோரியுள்ளார் என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-3)

# மாறிவரும் அரசியல் சூழ்நிலையை பயன்படுத்தி நிரந்தர சமாதானம்

## ஜனாதிபதியும் தனது பங்கினை வழங்க அரிய சந்தர்ப்பம்

ஆழிசூழ் இலங்கைமேல், அகில உலக நாடுகளின் கவனமும் பார்வையும் திரும்பியுள்ள அருமையும் பெருமையுமிக்க சந்தர்ப்பம் இது.

இலங்கை வாழ் மக்கள் அனைவரும் சாதி, மத, மொழி வேறுபாடின்றி நாட்டின் சாந்தியையும் சமாதானத்தையும் காண அவாகொண்டு ஏங்கும் இனிய பொழுது.

பௌத்த துறவிகளும் - மக்களின் அவாவின் முன் மண்டியிட்டு மௌனித்திருக்கும் அருமையான நேரம்.

இடம், பொருள், ஏவல் அனைத்தும் ஒன்றித்திருக்கின்றன. அதாவது, நவக்கிரகங்கள் அனைத்தும் ஒன்றித்து ஒருமுகமாக நிற்கும் இச்சூழலைச் சரியாகப் பயன்படுத்துவதே சிறந்த தலைமையின் கடமையாகும்.

எனவே, உயர் நீதிமன்றத் தீர்ப்பின்மூலம் ஆண்டு ஒன்று கழிந்த பின் தூக்குமேடையை எதிர்பார்த்து ஏங்கும் ஐ.தே. முன்னணியினரும் மக்கள் முன் முகம் கொடுக்க முடியாது திண்டாடும் மக்கள் பிரதிநிதிகளும் - எப்படியும் ஐந்து ஆண்டு இருக்க ஆசைப்படுவது இயற்கையாகும்.

இந்த ஆசையில் மண் விழுந்துவிட்டது. 1978ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தன கொண்டு வந்த அரசியல் சட்டம் அத்தகைய இறுக்கமான விதிகளை உள்ளடக்கிய சட்டமாகும்.

இவ்வாறான நிலையில் அரசு முன்னெடுத்துள்ள சமாதான யாத்திரையின் நிலை என்ன?

"பிரதமர் ரணிலால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாது - சர்வநிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை குறுக்கிடும் - அதைப் பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பும் கடமையும் ரணிலுடையது" என தமிழர் தேசியத் தலைவர் வேபிரபாகரன் அறுதியிட்டு உறுதியாக சமீபத்தில் நடந்த சர்வதேசப் பத்திரிகையாளர் மாநாட்டில் கூறினார்.

"எதிர்க்கட்சியும் ஆளுங்கட்சியும் இணைந்தால்தான் இனப்பிரச்சினையை அதாவது சமாதானத்தை நிலைநாட்ட முடியும்."

- இவ்வாறு பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட சமீபத்தில் சென்னை இந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார்.

நாடாளுமன்றப் பலமுள்ள ரணிலும் சர்வநிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் இணைந்தால் சமாதானம் காணமுடியும் என புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவப் பேராசிரியருமான அன்ரன் பாலசிங்கம் நம்பிக்கை தெரிவித்திருந்தார்.

இலங்கை மக்கள் 1994ஆம் ஆண்டு சமாதானத்தை நாடி - அதைக் கொண்டு வரமறுத்த ஐ.தே.கட்சியை - நாடாளுமன்றத்திலும் - பின்னர் சர்வ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித் தேர்தலிலும் தோற்கடித்தனர்.

சமாதானத்தைக் கொண்டு வருவேன் என்று உறுதி தந்த பொ.ஐ. முன்னணியையும் அதன் தலைவி சந்திரிகாவையும் வெற்றியடையச் செய்தார்கள்.

பலன், சமாதானத்திற்குப் பதிலாக சமாதானத்தை நிலைநிறுத்த, கொடிய யுத்தம் வெடித்தது.

விடியலை நோக்கிய மக்கள், வேதனையைக் கண்டதும் வெருண்டு மீண்டும் ஐ.தே.முன்னணி சமாதானத்தைக் கொண்டு வருவது பற்றி உறுதியளித்ததில் நாடாளுமன்ற பெரும்பான்மையை அக்கட்சிக்கு வழங்கினர்.

இந்த முடிவின்படி இலங்கை மக்கள், நாட்டுக்கும் நாட்டை ஆள்பவர்களுக்கும் ஒரு சிறந்த அரசியல் தீர்வை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

அதாவது இந்த அரசியல் சட்டப்படி எந்தக் காலத்திலும் தனிப்பெரும்பான்மையை எந்த ஒரு தனிக்கட்சியும் பெறமுடியாது.

### தனிக்கட்சியால் முடியாது

இலங்கையில் கடந்த இரண்டு தசாப்தங்களாக புரையோடிய புண்ணான இனப்பிரச்சினைக்கு எந்தத் தனிக்கட்சியாலும் தீர்வுகாணமுடியாது. காரணம் அக்கட்சிகள் அனைத்தும் - தேர்தலை நோக்கமாகக் கொண்டவை.

ஒரு கட்சி எந்த வகையில் ஒரு தீர்வை வழங்கினாலும் அது அக்கட்சியின் சிங்கள வாக்காளர்களை உசுப்பிவிடும். எனவே, சிங்கள மக்களின் வாக்கு வங்கியை நம்பியுள்ள எந்தத் தனிக்கட்சியும் - பிரச்சினையைத் தீர்ப்போம் எனக் கூறி தேர்தலில் வெல்லக்கூடும்.

ஆனால், அதிலிருந்து நழுவப் பார்ப்பார்களேயொழிய பிரச்சினையைத் தீர்க்கமாட்டார்கள்.

கடந்த காலங்களில் நடைபெற்ற பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், சிறிமா - செல்வா ஒப்பந்தம், ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தம் ஆகியன தந்த பாடங்கள்.

இவற்றை நன்குணர்ந்து கொண்ட இலங்கை வாக்காளர்கள் எந்த வகையிலும் இரு கட்சிகளையும் ஆட்சியில் இணைத்து இதற்கோர் நிரந்தரத் தீர்வு காண எடுக்கும் முடிவே நாட்டின் இன்றைய அரசியலாகும்.

இந்த மக்கள் ஆணையை இரு கட்சித் தலைமையும் கௌரவப்படுத்த வேண்டும்.

உண்மையில் இரு கட்சியினரும் நாட்டின் மீதும் - நாட்டு மக்கள் மீதும் உண்மையான பற்றும் பாசமும் விசுவாசமும் வைத்திருந்தால் வெற்றி பெறவாய்ப்புண்டு.

ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி சமாதானத்தைக் கொண்டு வருவேன் என உறுதியாகக் கூறியதன் பேரில் அதை நம்பிய மக்கள் வாக்களித்தே அவரை ஜனாதிபதியாக்கினார்கள்.

அதேபோல், சமாதானத்தைக் கொண்டுவருவேன் எனக் கூறிய ரணிலை மக்கள் பின்னர் பிரதமராக்கினார்கள்.

### தனிப்பட்ட செல்வாக்கு

இந்த இரண்டு கட்சிகளும் தனிப்பட்ட செல்வாக்கால் ஆட்சிக்கு வந்தவை அல்ல. முன்னர் நடந்து முடிந்த மூன்று ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தோல்வி கண்டது. பின்னர் நடந்த இரு ஜனாதிபதித் தேர்தல்களில் ஐ.தே.கட்சி தோல்வி கண்டது. இதிலிருந்து என்ன தெளிவாகிறது?

எந்தக் கட்சியினதும் தனிப்பட்ட செல்வாக்கை மக்கள் மதிக்கவில்லை. மக்கள் மதித்ததெல்லாம் இலங்கையில் சமாதானம் வேண்டும் என்ற ஜீவாதாரக் குறிக்கோளையே.

அதற்கு முக்கியம் கொடுத்து - முதன்மை கொடுத்து - மக்கள் வாக்களித்தார்கள்.

இந்த நிதர்சனமான மக்களாணையை மதித்துப் போற்றி வழி நடப்பதே உண்மையான ஜனநாயகப் பண்பாகும்.

நடந்து முடிந்த தேர்தலின் பெறுபேறு வெளியானதும் ஐ.தே.முன்னணி என்ன செய்திருக்கவேண்டும்?

தனது சமாதானக் குறிக்கோளை நிறைவேற்றவும் - நாட்டுமக்களின் ஆணையை நிறைவேற்றவும் ஜனாதிபதியின் பூரண ஆதரவைப் பெறக் கூடிய முறையில் தனது அமைச்சரவையை அமைத்திருக்கவேண்டும்.

அதை விடுத்து ஜனாதிபதிக்கு எதிரானவர்களை அமைச்சர்களாக்க அடம்பிடித்து - அவர்களை புகுத்தி - அவர்கள் ஜனாதிபதியை விமர்சிக்க வழியேற்படுத்தின.

பொ.ஐ.முன்னணியினரைக் கண்டமாதிரி கைதுசெய்து சிறைப்பிடித்து - வெறுப்பையும் வெடிப்பையும் இரு கட்சி விரிசலையும் ஏற்படுத்தி - ஒரு நல்ல அரசியல் சூழலை அவலப்படுத்திவிட்டார்கள் என்று புகார் கூறப்படுகிறது.

1977ஆம் ஆண்டுமுதல் 1994ஆம் ஆண்டுவரை 17 வருட ஆட்சியில் ஐ.தே.கவினர் செய்யாத தில்லுமுல்லுகளா? அதுபோல பொ.ஐ.முன்னணியும் ஏராளமான தப்புகள், தவறுகள், ஊழல்கள் செய்திருக்கிறது.

இது பேரினவாத அரசியல்வாதிகளுக்கு கைவந்த கலை. இரண்டு கட்சிகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

**பூ.ம.செல்லத்துரை**

பொ.ஐ.முன்னணி ஊழல் பேர்வழிகள் என்று ஒதுக்கியவர்களை ஆட்சியைப் பிடித்ததில் தனக்கு உறவினர்கள் என்பதற்காக அமைச்சர்களாக்கினார் பிரதமர் ரணில்.

எனவே, இரு பிரிவினரிலும் சமமான அல்லது சமச்சீரற்ற ஊழல்கள் இருக்கின்றன.

ஆனால், அவையல்ல இன்றைய முக்கிய தேவை. பிழை செய்தவர்களை மக்கள் தண்டித்துவிட்டார்கள். ஆனால், மக்கள் விரும்பிய சமாதானத்தை, சாந்தியை நிலைநாட்டுவதே இன்றைய தேவையாகும்.

### வெளிநாட்டுப் பயணங்கள்

பிரதமர் சமாதானம் தேடி வெளிநாடு ஓடுவதெல்லாம் - வீண் பிரசாரமாகும் உண்மையில் சமாதானத்தில் ரணில் நம்பிக்கையும் விசுவாசமும் வைத்திருந்தால் அச்சமாதானம் நிலைக்கக்கூடிய அரசியல் சூழலை இலங்கையில் ஸ்திரப்படுத்தி இருக்க வேண்டும். அதற்கு இரு கட்சி மோதலையும் தவிர்த்து ஜனாதிபதியுடன் இணைந்து - சமாதானப் பேச்சுக்கு முதல், இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வுக்கு முடிவொன்றைக் கண்டிருக்கவேண்டும்.

இரு கட்சிகளின் கூட்டுக்குழு ஒன்று தெரிவுசெய்யப்பட்டிருக்கவேண்டும். அக்குழுவே விடுதலைப் புலிகளோடு பேச்சு நடத்தி பேச்சைச் சமநிலைப்படுத்தியிருக்கவேண்டும்.

ஜனாதிபதியும் பிரதமரும் இறுதிப் பேச்சில் கலந்து - முடிவெடுத்தால் தான் நாட்டில் அரசியல் சட்டபிரச்சினையின்றி சமாதானம் நிலைக்கும்.

இந்நிலையில் ஜனாதிபதியின் பங்கு மிகமிக முக்கியமானதாகும். அவர் சமாதானத்தில் கொண்டுள்ள விசுவாசம் உண்மையானால் - சட்ட அதிகாரங்களைத் தூக்கிப் பிடிக்காமல் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நலம் தரக்கூடிய இரு கட்சிகளையும் இணைக்கவேண்டும்.

தனது தலைமையில் ஒரு விசேட குழுவை அமைத்து - நீண்டகால இனப்பிரச்சினைக்கு இணக்கமான முடிவைக் கொண்டுவரவேண்டிய பெரும் பொறுப்பை நிறைவேற்றி வரலாற்றில் இடம்பிடிக்கலாம்.

### ஒளிமயமான எதிர்காலம்

எனவே, நாடும் நாட்டு மக்களும் ஜனாதிபதியிடமிருந்தும் பிரதமரிடம் இருந்தும் ஒளிமயமான எதிர்காலத்தை எதிர்பார்க்கிறார்கள்.

வரலாறு ஒருவர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பதை நினைவு கூருவதில்லை. அவர்கள் வாழ்ந்த நாள்களில் எதைச் சாதித்தார்கள் என்பதிலே குறியாக இருக்கிறது.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக வாழ்ந்த நாள்கள் குறைவு. ஆனால், அடிமை விலங்கொடித்த சட்டத்தின்மூலம் வரலாற்றில் நீண்ட நினைவுச் சின்னமாக நிலை பெற்றுவிட்டார்.

எனவே, நாட்டுக்கு நல்லதைச் செய்து நீண்ட நெடிய நினைவை வரலாற்றில் நிலையாக்க ஜனாதிபதியும் பிரதமரும் முன்வரவேண்டும்.

☆

# அடைமழை பெய்து வருவதால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து!

யாழ்ப்பாணம்,நவ.25

மழைகாலம் ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டுப் பகுதிகளில் பல தொற்று நோய்கள் பரவும் ஆபத்து தீவிரமடைந்துள்ளது.

வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களின் தாக்கம் அதிகரித்திருப்பது யாழ்.போதனா வைத்தியசாலைப் பதிவேடுகளின்படி தெரியவருகிறது.

இந்நோய்களினால் அதிகபட்சம் சிறுபிள்ளைகளே பீடிக்கப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டுப் பகுதியில் இருந்து பரவலாக இந்நோயினால் பீடிக்கப்பட்ட சுமார் 19 சிறுபிள்ளைகள் தற்போது ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். கடந்த இரு வாரங்களாக சராசரி தினமும் 10 பேர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இதே வேளை, வாந்திபேதி என சந்தேகத்துடன், திருநெல்வேலியில் இருந்து குகதேவன் திலக்ஷன் என்ற 6 மாத ஆண்குழந்தை ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது. இப்பிள்ளையின் நோயை உறுதிப்படுத்துவதற்கான பூர்வாங்கப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, வயது வந்தவர்களும் வயிற்றோட்டம், வாந்திபேதியின் பாதிப்பிற்குள்ளாகியே வருகின்றனர். சிலர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோதிலும் பலர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் செல்வது தெரியவருகிறது.

வெளிநோயாளர் பிரிவுக்குவரும் நோயாளர்களில் 50 வீதமானோர் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் தொற்று நோய்க்கான கிருமிகள் பரவும் வாய்ப்பே அதிகம் உள்ளது. நோய்க்காவிகளான இலையான், நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. மக்களின் பாவனையிலுள்ள நீர் நிலைகள் பெரும்பாலும் அசுத்தம் நிறைந்து சுகாதாரச் சீர்கேடான நிலை தோற்றுவித்துள்ளன. ஆகவே, பொதுமக்கள் இந்நோய்கள் தம்மைத் தொற்றாதவாறு, இயலுமானவரை சுகாதாரப் பகுதியினரின் ஆலோசனைகளை கருத்திற்கொண்டு சுகாதார முறைப்படி நடக்கும் பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நீர் நிலைகளைத் துப்புரவாக வைத்திருப்பது, கொதித்தாறிய நீரைப் பருகுவது, இலையான்கள் பரவும் நிலையில் உள்ள உணவுகளையோ, பழவகைகளையோ, இனிப்புப் பொருள்களையோ உண்பதைத் தவிர்ப்பது, தாம் சமைத்த உணவுகளிலும் இலையான் போன்றவை பரவாது மூடிவைப்பது போன்ற பழக்கங்களை மேற்கொள்வது நோய் பரவாது தடுக்கும் வழிகளாகும்.

தொற்றுநோய்க் கிருமிகளுடன் இருக்கும் இலையான்கள் சிறுகுழந்தைகளின் உடற்பாகங்களில் அமராதவாறு பார்த்துக்கொள்வது பாதுகாப்பானதாகும்.

(ஒ-15)

## மேலும் 25 மீனவர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்கள்

### கடற்றொழிலாளர் சமாசம் இன்று வழங்கும்

குருநகர்,நவ.25

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த மேலும் இருபத்தைந்து கடற்றொழிலாளர்களுக்கு கடனடிப்படையில் ஜமகா வெளியிணைப்பு இயந்திரங்கள் இன்று வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன என சமாசத் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

யாழ்.ஹற்றன் நஷனல் வங்கியினால் வழங்கப்பட்ட கடன் திட்டத்தில் இவ்வியந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

பாஷையூர், மயிலிட்டியைச் சேர்ந்த தலா நான்கு பேருக்கும், வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த எண்மருக்கும், குருநகர்,மாதகல் ஆகிய இடங்களைச் சேர்ந்த தலா இருவருக்கும், கற்கோவளத்தைச் சேர்ந்த ஒருவருக்கும், சேந்தாங்குளத்தைச் சேர்ந்த தலா இருவருக்கும் இன்று இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் 4ஆம் திகதியும் இருபது கடற்றொழிலாளர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-51)


## விண்ணப்பித்து விட்டீர்களா?

IIS இன் மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2003

விண்ணப்ப முடிவுதிகதி - 15.12.2002

டிசம்பரில் O/L பரீட்சையும்
ஏப்ரலில் A/L பரீட்சையும்
எடுக்கவிருக்கும் மாணவர்களே!

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையுள்ள காலத்தைப் பயனுள்ளதாக்குவதற்கு, IIS இன் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் கணனி உலகில் இணைந்து கொள்ளுங்கள்.

பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டியாக அமைவதற்கு இவ்வரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

"உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி IIS"

INSTITUTE OF INFORMATICS STUDIES
100, Clock Tower Road, Jaffna.

IIS IIS IIS IIS IIS


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். இந்துவின் மைந்தனும்
யாழ். இந்துக் கல்லூரி
ஆசிரியருமான

### திரு.சதாசிவம் நிமலன்

அவர்கள் யாழ். மாவட்ட, சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டதையிட்டு அவர் பணி சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வண்ணார்பண்ணை,
ஓட்டுமடம் நண்பர்கள்

(10950)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.சதாசிவம் நிமலன் J.P.

(யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு பொறுப்பாசிரியர்)

அவர்கள் கடந்த 22.11.2002 அன்று இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு மனம் மகிழ்வதோடு அவர் எல்லாம் வல்ல இறைவன் அருளோடு பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

மைத்துனர் - சி.சரவணபவன் (கொக்குவில் இந்துக் கல்லூரி)
அம்மா - திருமதி பொ.சதாசிவம்
சகோதரி - ச.பிறேமா
மருமகன - ச.சேந்தன்
மருமகள்கள் - ச.மதுமிதா, ச.மயூரதி

ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம். (10944)

## கவிதைநூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.25

'ஈழகேசரி' எழுத்தாளரும், கவிஞருமான அமரர் அல்வாயூர் மு.செல்லையா 1952 இல் எழுதிய 'வளர்பிறை' கவிதைத்தொகுதியின் இரண்டாவது பதிப்பு வெளியீட்டு விழா இன்று முற்பகல் 11மணிக்கு 'அன்ன அகம்', அல்வாய்தெற்கு, அல்வாய் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகக் கல்வித் துறையைச் சேர்ந்த தகலாமணி தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் வெளியீட்டுரையை கவிஞர் இ.முருகையனும் மதிப்புரையை தெணியானும், ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் நிகழ்த்துவர். (எ)

## இணுவிலில் இரு வீதிகள் புனரமைக்கப்படவில்லை

இணுவில்,நவ.25

இணுவில் பகுதியில் உள்ள செட்டிவளவு வீதி, முதலியார் வீதி என்பன நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாகக் காட்சியளிக்கின்றன.

பருவமழை ஆரம்பித்ததை அடுத்து மேற்படி வீதிகளில் உள்ள குழிகளில் மழை வெள்ளம் தேங்கி நிற்கிறது.

இதனால் அந்த வீதியூடாக பயணிக்கும் மாணவர்கள், பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு உரியவர்களிடம் பலமுறை வேண்டுகோள் விடுத்த போதும இதுவரை உரிய நடவடிக்கை எதுவும எடுக்கப்படவில்லை என பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)


## தேவை

தரம் 1 முதல் O/L வரை கற்பிக்க ஆசிரியர் தேவை.

தொடர்பு: சைன் உடுவில் (11005)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



| வையகத்துள் | தெய்வீகத்துள் |
| --- | --- |
| 14 - 05 - 1926 | 08 - 12 - 1998 |

### திருமதி சின்னத்தம்பி கனகம்மா

திதி : அபரபக்க ஷஷ்டி 25.11.2002

ஆண்டுகள் நான்கு ஆனதம்மா நீயன்பு
செய்ததை நாம் என்றும் மறப்போமா?

*சி.முருகமூர்த்தி,*
*முருகன் இரும்புத் தொழிற்சாலை*
*அன்ட் மணப்பந்தல், மீசாலை.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(11002)

## கண்ணீர் அஞ்சலி

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்களின் மைத்துனரின் மனைவி

### திருமதி சிறிநாதன் கங்காதேவி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமைச்சின் அலுவலர்கள்,
இந்துவிவகார அலுவல்கள் அமைச்சு,
பிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்.

(11008)

## மரண அறிவித்தல்கள்

### முருகன் ஆறுமுகம்

அராலியைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் ஆறுமுகம் அவர்கள் 21.11.2002 வியாழக்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2002) திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பகப் பிள்ளையார் கோயிலடி,*
*உடுவில் கிழக்கு.*

தகவல்:
ஆச்சிப்பிள்ளை புவனேஸ்வரி (மனைவி),
பிள்ளைகள்.

(11012)

### பொன்னுச்சாமி சச்சிதானந்தம்

*(தங்கவடிவேல்)*

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் காளி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி சச்சிதானந்தம் (தங்கவடிவேல்) நேற்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*காளி கோயிலடி,*
*மல்லாகம்.*

(11010)

தகவல்:
இ.குணசேகரம் (சகலன்)

### மயில்வாகனம் சந்திரசேகரம்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய மயில்வாகனம் சந்திரசேகரம் (ஓய்வு பெற்ற லிகிதர், இலங்கை துறைமுக அதிகார சபை, கொழும்பு) அவர்கள் நேற்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - ஆச்சிப்பிள்ளையின் அன்பு மருமகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் டிலோஜினி (கனடா) அவர்களின் அன்புத் தகப்பனாரும் சுதாஎந்தன் (கனடா) அவர்களின் அன்பு மாமனாரும் விதுஷா, இந்துஷா, அஜித் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் பூதப்பிள்ளை அன்னம்மாவின் (கனடா) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 1.12.2002 கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கொழும்பு:-06*
*T.P. 01 586721*

(11001)

தகவல்:
ச.தங்கரத்தினம் (கிளிஅன்ரி)
மனைவி

### சண்முகம்பிள்ளை ஞானமணி

கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகம்பிள்ளை ஞானமணி அவர்கள் இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் கனகம்மாவின் பாசமிகு கணவரும் பாலசிங்கம், பரமேஸ்வரி (ஜேர்மனி), இரத்தினசிங்கம் (ஆசிரிய ஆலோசகர்), நாகேஸ்வரி (யாழ்.வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுந்தரராணி, குணசேகரம் (ஜேர்மனி), செல்வராணி (ஆசிரியை), அமிர்தலிங்கம் ஆகியோரது மாமனும் அகிலன், அருணன், கபிலன், மேகலா, சுகன்யா, வித்யா, பிரணவன், செந்தூரன், அபிநயன், கார்த்திகா, பானுகா ஆகியோரது பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புலவனார் வீதி, கல்வியங்காட்டிலுள்ள இல்லத்தில் இன்று (25.11.2002) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் செம்மணி இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவனார் வீதி,*
*(முக்குறுனிப் பிள்ளையார் வீதி)*
*2 ஆம் ஒழுங்கை, கல்வியங்காடு.*

தகவல்:
ஞா.இரத்தினசிங்கம்
(மகன்) (11004)

# வைத்தீஸ்வராவில் மாடிக் கட்டம்

சண்டிலிப்பாய்,நவ.25

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜி.ரி.இசற்) நிதி உதவி திட்டத்தின் கீழ் மாடிக்கட்டடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றது.

15 லட்சம் ரூபாவை இதற்கென இந்த நிறுவனம் ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் -

இத்துடன், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்களின் பாவனைக்காக மூன்று லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரை, மேசைகள் இந்த நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகவும் - கல்லூரி அதிபர் நா.வன்னியசிங்கம் தெரிவித்தார்.

இதேவேளை - மேற்படி நிறுவனத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் ஆண்களுக்கான மலசலகூட கட்டடம் ஒன்றும் கல்லூரியில் அமைக்கப்பட்டு வருவதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

# சந்திரிகாவை..

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியாசமானது. அவரது அமைச்சரவை செயலற்ற, அதிகாரமற்ற, வெறும் பெயரளவிலான அமைப்பாகவே அமைந்தது. எவ்வித நிர்வாகத் திறமையோ, பொறுப்போ அற்ற சில தனிப்பட்ட நெருங்கிய நண்பர்களது ஆலோசனைகளுக்கேற்ப சந்திரிகாவால் எல்லா முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட முடிவுகள் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் தமது முக்கிய சகாக்கள் மீது முழுமையான விசுவாசம் வைத்து நடந்துகொள்வதாகத் தெரியவில்லை. பதிலாக தனிப்பட்ட நெருங்கிய சிநேகிதர்கள் மீது நம்பிக்கை வைத்துச் செயற்படுவதுபோலத் தோன்றுகிறது.

நமது நாட்டில் பழக்கத்தில் இருந்துவரும் அரச நடைமுறைகளின்படி அரசின் முக்கிய நிறைவேற்றுச் சபை போன்று செயல்படுவது அமைச்சரவையே. அமைச்சரவை அங்கத்தவர்களிடையே திறமைகள் மறைந்திருக்கக்கூடும். அக்குழு உறுப்பினர்களிடையே ஏற்புடைய வரையில் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து அதிஉச்ச அளவில் அவர்களது திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளிப்பதன் மூலம் தவறுகள் இடம்பெறாது தடுக்கவும், அவர்களைச் சரியான பாதையில் இட்டுச் செல்லவேண்டிய கடமையும் ஒரு தலைவனுக்குரிய பொறுப்பாகும். பொறுப்பான நடவடிக்கைகள் யாவும் அமைச்சரவையில் விவாதிக்கப்படல்வேண்டும். முக்கியமான முடிவுகள் யாவும் அமைச்சரவையினூடாகவே மேற்கொள்ளப்படவேண்டும். அரசாங்கத்தின் குறிக்கோளும் அக்குறிக்கோளை அடைவதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சரவைக்கு பொறுப்பு இருத்தல்வேண்டும். தீர்மானங்களை செயற்படுத்துவோர் அமைச்சரவையுடன் இணைந்து செயற்படும் நிலைமை பேணப்படல் வேண்டும்.

ஒரு தலைவரின் சிந்தனையில் எப்போதும் சிறப்பான நடவடிக்கைகளுக்கான உபாயங்கள் தோன்றுமெனக் கூற இயலாது. தலைவனின் முக்கிய குறிக்கோள் பற்றியும், அக்குறிக்கோளை அடைவதற்கான முறைகள் பற்றியும் பொதுமக்களது மனதிலும் பெறுமானமுள்ள யோசனைகள் தோன்றக்கூடும். அரசினது நடவடிக்கைகள்மூலம் தமது வாழ்க்கையில் முன்னேற்றமான மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு என தெரியும் பட்சத்திலேயே பொதுமக்கள் அரசுக்குத் தமது ஆதரவை நல்கி சிக்கலான சந்தர்ப்பங்களில் அரசுக்குப் பாதுகாப்பளிக்க முன்வந்து அரசின் திட்டங்கள் மீது நம்பிக்கை கொள்கிறார்கள். ஆனால் இப்போது சமாதான முயற்சிகள் பற்றியோ, தனியார் மயப்படுத்தும் திட்டம் பற்றியோ கேள்விப்படுவதைத் தவிர அரசு எதிர்பார்க்கும் குறிக்கோள் பற்றி பொதுமக்களிடையே தெளிவான விளக்கம் காணப்படவில்லை. அரச நிர்வாகம் தற்போது குப்பைகூளம் நிறைந்து காணப்படுகிறது. அதனைப் புனரமைப்பதா அன்றேல குப்பைகூளங்களை அதேவிதத்தில் தொடரவிடுவதா என்பது பற்றிய எவ்வித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய குழப்பமான நிலையை இந்த அரசு எதிர்நோக்கியுள்ள பெரிய பின்னடைவாகக் கருத முடியும். ★

## சமய சந்நிதிகளில்

கொடிகாமம் , நாவலடி சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயத்தில் மணவாளக் கோல விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ஒ-10)

★ ★ ★

வட்டுக்கோட்டை, நெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சோம வார விசேட பூஜை கார்த்திகை மாதத்து திங்கட்கிழமைகளில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறுகிறது. (ஒ-10)

★ ★ ★

மிருசுவில் புனிதர் நீக்கிளார் ஆலய வருடாந்த உற்சவம் நாளை மறுதினம மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. (ஒ-51)

## பிரதம தபாலகத்தை சொந்த இடத்தில் இயக்க முயற்சி!

குருநகர்,நவ.25

தற்போது யாழ்.பிரதம தபாலகம் செயற்படுமிடத்தில் மிகுந்த இட நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. இதனால் யாழ்.முற்றவெளி அருகே புதிதாக கட்டப்பட்டு வரும் யாழ்.பிரதம தபாலகக் கட்டடத்தின் ஒரு பகுதியையாவது விரைவில் கட்டிமுடித்து அங்கு விரைவில் பிரதம தபாலகத்தை இயங்கச் செய்யும் முயற்சியில் யாழ்.பிரதம தபாலக உயரதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது யாழ்.பிரதம தபாலகம் இயங்கிவரும் கட்டடம் தனியாருக்குச் சொந்தமானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-51)

## வெற்றிலை தோட்டங்களில் மழை வெள்ளம் !

சண்டிலிப்பாய்,நவ.25

சில்லாலை பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தினால் வெற்றிலைத் தோட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று நாள்களுக்கு மேலாக பெய்துவரும் மழைகாரணமாக வெற்றிலைத் தோட்டங்களில் வெள்ளம் தேங்கி நிற்கின்றன. இதனால் வெற்றிலைக் கொடிகள் அழிந்துபட்டுப்போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வெற்றிலை செய்கையாளர்கள் கவலை தெரிவித்தனர். (எ-135)

## வடமராட்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்

### கிளைக்குழுத் தெரிவு - 30.11.2002

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவு எதிர்வரும் 30.11.2002 இல் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுதொடர்பான அறிவித்தல்கள் கிளைக்குழுத் தெரிவு நடவடிக்கைகளில் பங்குபற்ற தகைமையுள்ள ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் தனித்தனியே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. எனினும் இடம்பெயர்வு மற்றும் முகவரிகள் தெளிவின்மை காரணமாக சில அங்கத்தவர்களுக்கு இக்கடிதங்கள் கிடைக்கமுடியாத சூழ்நிலை ஏற்படலாம். எனவே தனிப்பட்ட அறிவித்தல் கிடைக்காதுவிடினும் தகுதியுள்ள சகல அங்கத்தவர்களையும் இத்தெரிவு நடவடிக்கைகளில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கிளைக்குழுத் தெரிவு பற்றிய மேலதிக விவரங்களை சங்கக் கிளைகளிலும் ஏனைய பொது இடங்களிலும் உள்ள அறிவித்தல்களில் பார்வையிட்டுக்கொள்ளலாம்.

எனவே, தகுதியான சகல அங்கத்தவர்களும் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்படும் இடங்களில் 30.11.2002 அன்று காலை 10 மணிக்குச் சமுகமளித்து தமது கிளைக்கு உரிய கிளைக்குழு நிர்வாகிகளை தெரிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

#### கிளைக்குழுத் தெரிவு தொடர்பான விவரம்

| கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபை கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|
| 01 | மருதங்கேணி | மருதங்கேணி கிளை நிலையம் |
| 02 | தாளையடி | தாளையடி கிளை நிலையம் |
| 03 | வத்திராயன் வடக்கு | வத்திராயன் வடக்கு கிளை நிலையம் |
| 04 | வத்திராயன் | உடுத்துறை மகா வித்தியாலயம் |
| 05 | உடுத்துறை | உடுத்துறை கிளை நிலையம் |
| 06 | ஆழியவளை | ஆழியவளை கிளை நிலையம் |
| 07 | வெற்றிலைக்கேணி | வெற்றிலைக்கேணி கிளை நிலையம் |
| 08 | முள்ளியான் | கட்டைக்காடு றோ.க. தமிழ்க் கலவன் வித்தியாலயம் |
| 09 | கேவில் | கேவில் கிளை நிலையம் |
| 10 | செம்பியன்பற்று தெற்கு | செம்பியன்பற்று தெற்கு கிளை நிலையம் |
| 11 | செம்பியன்பற்று வடக்கு | செம்பியன்பற்று வடக்கு கிளை நிலையம் |
| 12 | மாமுனை | மாமுனை கிளை நிலையம் |
| 13 | குடாரப்பு | தும்பளை நிவாரணக் கிளை நிலையம் |
| 14 | நாகர்கோவில் | தும்பளை நிவாரணக்கிளை நிலையம் |
| 15 | நாகர்கோவில் வடக்கு | தும்பளை நிவாரணக் கிளை நிலையம் |
| 16 | அம்பன் | அம்பன் கிளை நிலையம் |
| 17 | குடத்தனை வடக்கு | குடத்தனை வடக்கு கிளை நிலையம் |
| 18 | பொற்பதி | பொற்பதி கிளை நிலையம் |
| 19 | குடத்தனை | குடத்தனை கிளை நிலையம் |
| 20 | மணல்காடு | மணல்காடு கிளை நிலையம் |

செ.கனகசபாபதி
*கூ.அ.உ.ஆணையாளர்,*
*யாழ்.மாவட்டம்.*

(C/24971)

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3206364 இருந்து 3222997 வரை
சீட்டிழுப்பு இல. 1352
திகதி 23.11.2002



வெற்றி எண்கள்
**02 14 15 27 43**
போனஸ் எண்
**34**

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 103 | 10,000/- | 1,030,000/- |
| 3 | 5,239 | 500/- | 2,619,500/- |
| 2 | 87,344 | 20/- | 1,746,880/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 107,052 | 10/- | 1,070,520/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,266,800/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 1,500,000/-

தொடர் இல. 2228254க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 27ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3219694-3-93
3210953-0-14
3206539-7-38
3208858-6-85
3219167-1-63

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 425 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு |
|---|---|---|
| திகதி | 22.11.2002 | செல்லுபடியாகும் தொடர் இல. 5577950-5590418 |

வெற்றி இலக்கங்கள் **30 34 37 42**

லக்கினம் கும்பம்



ஜக்பொட் பரிசு ரூபா. 5,329,350/- வெல்லப்பட்டது

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 274,783 | 10 | 2,747,830 |
| 2 இலக்கங்கள் | 25,154 | 20 | 503,080 |
| 1 இல + லக்கினம் | 25,014 | 30 | 750,420 |
| 2 இல + லக்கினம் | 2,360 | 100 | 236,000 |
| 3 இலக்கங்கள் | 670 | 500 | 335,000 |
| 3 இல + லக்கினம் | 62 | 5,000 | 310,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 5,329,350 | 5,329,350 |
| மொத்தம் | 328,047 | - | 10,511,680 |

மொத்தப் பரிசுத் தொகை
ரூபா. 10,511,680/-

தொடர் இல. 4592330க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2002 நவம்பர் 26ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் ஹொண்டா முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5587703-5-22
5583736-7-22
5586801-5-63
5579443-9-30
5586855-7-87

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

PHOENIX O&M

# கல்விச் செயற்பாடுகளின் நடுநிலையம் பாடசாலைகளில் இயங்கும் நூலகங்கள்

## பருத்தித்துறை பிரதம நூலகர் கூறுகிறார்

செம்பியன்பற்று,நவ.25

உலக நாடுகளில் பாடசாலை கல்வியின் நடுநிலையங்களாகப் பாடசாலை நூலகங்கள் ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளன. அத்துடன் பல்வேறு வகையான பாடநெறிகள் மற்றும் அமைச்சுக்களூடாக வரும் கற்கை நெறிகள் அனைத்துக்கும் மையமாகத் திகழ்வன பாடசாலை நூலகங்களே.

- இவ்வாறு கூறினார் பருத்தித் துறை பிரதேச சபை நூலகத்தின் நூலகர் எஸ்.திருச்செல்வம்.

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியின் நூலக வார விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்லூரியின் பிரதி அதிபர் என். நேசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலைக் கல்வி தொடர்பான தேவைகளை நிறைவு செய்யும் நிலையங்களாக பாடசாலை நூலகங்கள் திகழ்கின்றன. புதிய கல்வித் திட்டத்தில் தேடிக் கற்றலுக்கு ஏற்ற வழிகாட்டிகளாகவும் பாடசாலை நூலகங்கள் செயற்படுகின்றன.

ஆசிரிய நூலகர்கள், நூலக நூலகர்கள் அறிவாற்றல்களுடன் கூடிய பன்மொழிப் புலமையாளர்களாக இருக்கவேண்டும். புதிய தொழில்நுட்பம், கற்கை அறிவியல் பாடசாலை கலைத்திட்டம் போன்றவற்றில் பொதுவானதும் பரந்துபட்டதுமான அறிவினைக் கொண்டிருக்க வேண்டும்.

கற்கை மையங்களாக பாடசாலை நூலகங்களை முகாமைத்துவப்படுத்தும் பணி, வளப்படுத்தும் பணி நூலகர்களைப் பொறுத்தது. இவர்கள் இன்றைய மாணவர்களை நூலகத்தைப் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும் - என்றார்.

(எ-36)



அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த அலிஸ்ரா நில், தலைவர் அ.நல்லதம்பி ஆகியோர் மேடையில் காணப்படுகின்றனர். (எ-5)

### மாணவர்களுக்கு நன்மை அளிக்கும்

# பொது அறிவு, விவேகம் குறித்த விடயங்களை தேடிக் கற்பிப்பது ஆசிரியர்களின் கடமை

## நூல் வெளியீட்டு விழாவில் தெரிவிப்பு

மாணவர்களுக்கு பயன்தரக்கூடிய பொது அறிவு, பொது விவேகம் தொடர்பான விடயங்களைத் தேடித் திரட்டிக் கற்பிப்பது ஆசிரியர்களின் தலையாய கடமை.

இணைப்பாறிய இந்துசமய பாட ஆசிரிய ஆலோசகர் நடேசன் சிவசண்முகமூர்த்தி இவ்வாறு தெரிவித்தார்.

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்ட சமயத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்து மாமன்றத் தலைவர் திருமதி எஸ்.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களின் பாடச் சுமையைக் குறைத்து, அவர்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளவும், பரீட்சையில் சித்தியடையக்கூடியவாறும் பாடத் திட்டங்கள் அமையவேண்டும்.

அது மட்டுமல்லாது, தேவையான விடயங்களைத் தொகுத்து மாணவர்களுக்கு வழங்குவதும் பயனுடையதாகும் - என்றார்.

இந்த நிகழ்வில் ஆசியுரையை நிகழ்த்திய தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சு.சுந்தரராசக்குருக்கள் -

மாணவர்கள் தேவை அறிந்து தொகுக்கப்பட்டுள்ள இந்த நூல், சமய பாடத்தை இலகுவில் விளங்க வைப்பதோடு, பரீட்சையில் மாணவர்கள் அதிகூடிய புள்ளிகளைப் பெறவும் பெரும் உதவியாக விளங்கும் என்றும் -

சைவசமயத்தவர்களாகிய நாம் அனைவரும் சமய தீட்சையைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அதற்கேற்ற வகையில் பாடசாலைகள் தோறும் சென்று சமய தீட்சை வழங்குவதற்கான ஒழுங்குகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். இதனை அனைவரும் தக்கவாறு பயன்படுத்தி பயனடையவேண்டும் என்றும் - தெரிவித்தார். (எ-5-28)

# பொலீஸாரின் தேடுதலில் கசிப்பு, கோடா அகப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.25

யாழ்.பொலீஸ் நிலையப் பொலீஸார் நேற்றுமுன்தினம் யாழ். நகரப் பகுதியில் மேற்கொண்ட கசிப்பு வேட்டையின்போது கசிப்பு மற்றும் கோடா, கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றினர். இந்தச் சோதனையின்போது மூவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் அபூபக்கர் வீதியிலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 53 போத்தல் கசிப்பு மற்றும் 5 பரல் கோடா, கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் என்பன பொலீஸாரால் மீட்கப்பட்டன.

இது தொடர்பாக பிரான்ஸிஸ் குணநாயகம் என்பவர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

- இதேவேளை, யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட வீதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது 20 போத்தல் கசிப்பு மற்றும் பெருமளவு கோடா என்பன மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் பீ.கல்யாணி, ரி.சுசீலாதேவி ஆகிய இரு பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்த செனிவிரத்ன தலைமையிலான பொலீஸாரே இந்த தேடுதல் வேட்டையில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ-4-12)

### யாழ். ஆஸ்பத்திரியில்

# சுகாதார எழுதுநர் சங்கம் சுகவீன லீவுப் போராட்டம்

யாழ்ப்பாணம்,நவ.25

சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்துள்ள யாழ்போதனா வைத்தியசாலை சுகாதார எழுதுநர்கள் இன்றும், நாளையும் இரு நாள்கள் சுகவீன லீவுப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

5அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கொழும்பு சுகாதார எழுதுநர் கூட்டு முன்னணியால் கடந்த 11ஆம் திகதி முதல் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்ட சட்டப்படி வேலை இயக்கத்திற்கு ஆதரவாக யாழ்போதனா வைத்தியசாலை சுகாதார எழுதுநர் சேவைச் சங்கம் கடந்த 22ஆம் திகதி முதல் சட்டப்படி வேலையை ஆரம்பித்துள்ளது.

இச்சட்டப்படி வேலை இயக்கத்தால் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகப் பணிகள் பெரும் பின்னடைவுகளைச் சந்திக்க நேர்ந்துள்ளது.

சனி, ஞாயிறு பணி நீக்கம் இன்றைய சுகவீன லீவுப் போராட்டம் ஆகியவற்றால் நோயாளர்கள், சிற்றூழியர்களுக்கு வழங்கப்படும் நாளாந்த உணவு விநியோகப் பணியிலும் பெரும் தடங்கல்களும், நிர்வாக நிதிச் சிக்கல்களும் ஏற்பட்டுள்ளதாக நிர்வாக உயர் மட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் தாதியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போது, பொதுமக்கள் நலன்கருதி யாழ்.ஆஸ்பத்திரித் தாதியர் அப்போராட்டத்தில் உடனடியாக ஈடுபடுவதில்லை என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-15-139)

# கிராமிய வங்கிகளின் முதலீடுகளை கபளீகரம் செய்வதற்குத் திட்டம்

கிராமிய வங்கிகளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து எடுத்து மத்திய வங்கி ஒரு தனியான வங்கியை இயங்கவைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள ப.நோ.கூ.சங்கங்கள் இவ்விடயம் பற்றி நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இச்செய்தி 8.10.2002 உதயனில் வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் நல்லூர், யாழ்ப்பாணம், சுன்னாகம், நீர்வேலி, அச்சுவேலி, பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, அளவெட்டி, சங்கானை, மானிப்பாய், பருத்தித்துறை, புலோலி, கட்டைவேலி, வடமராட்சி கிழக்கு, உடுப்பிட்டி, ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, காரைநகர், சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம், நெடுந்தீவு ஆகிய இடங்களில் சங்கங்கள் உள்ளன. அநேகமாக இச்சங்கங்களில் உள்ள கிராமிய வங்கிகளின் முதலீடுகளை அபகரிப்பதே




இந்த நடவடிக்கையின் நோக்கமாகும். பெரும்பாலும் இவையாவும் விவசாயிகளின் வைப்புப் பணமாகும். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் இயங்கிய கூட்டுறவு வங்கிகள் அரசினால் எடுக்கப்பட்டதுடன், யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு வங்கியையும் கூட்டுறவாளரின் உற்சாகத்தையும் இந்நடவடிக்கை தடுத்துவிட்டது. ஆகையால் அரசாங்கத்துக்கு இறுக்கமான அழுத்தத்தைக் கொடுத்து இவ்விடயத்தில் எமது உரிமையை நிலை நாட்ட வேண்டும். முன்னரும் ஒரு பிரதானமான செயலில் - யாழ்.கூட்டுறவாளர்களின் விடயத்தில் - அரசாங்கம் வருடப்படாத ரீதியில் செயற்பட்டு கூட்டுறவாளர்களின் உரிமையைப் பறித்து எடுத்தது. பல ஆண்டுகளுக்கு முன்னர் 'அல்கன்' நீர் இறைக்கும் இயந்திரங்களை விநியோகிப்பதற்கு சங்கானை ப.நோ.கூ.சங்கம் ஏகபோக உரிமை பெற்றிருந்தது. இவ்விநியோகத்தை, இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் இச்சங்கமே செய்து வந்தது. இதனை அறிந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் இதில் தலையிட்டு சங்கானை சங்கத்துக்கு வழங்கப்பெற்ற அனுமதியை ரத்துச் செய்தனர். இதனால் பெரும்பாலான யாழ். கமக்காரர்கள் பாதிக்கப்பட்டனர். இதற்கான நியாயத்தைக் கேட்டு பல சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தை கூட்டுறவாளர்கள் கோரியபோதும் அதனை நாங்கள் பெறமுடியவில்லை.

இன்றைய கூட்டுறவு நிலைக்கும் பல வருடங்களுக்கு முன் இருந்த நிலைக்கும் பல குறைபாடுகள், வேறுபாடுகள் காணப்படுகின்றன. கூட்டுறவுத்துறையில் பல புகார்கள் செய்யப்பெற்ற போதிலும் அதனை நிர்வகிக்கும் தலைமை சரியான நடவடிக்கையை பொறுப்பாக எடுக்காததினால்தான் இங்கு பலரும் தங்கள் அரசியல் செல்வாக்கைக் கொண்டு காரியங்களை நடத்துகின்றனர். கூட்டுறவுச் சங்கங்களுக்கு மக்கள் வங்கி தேவைக்கேற்றவாறு கூட்டுறவுப்பகுதியினரின் அனுசரணையுடன் கடன்களை வழங்கி வருகிறது. இப்பணத்தின் ஒருபகுதி கிராமிய வங்கிக்கும் ஒதுக்கப்பட்டு பணிப்பாளர் தீர்மானத்துக்கு அமைய கடன் கோருபவர்களுக்கு பணம் வழங்கப்படுகிறது. சில கிராமிய வங்கிகள் கொடுத்த கடனை மீளப் பெறமுடியாத நிலையில் புதிதாகக் கடன் பெறுபவர்களுக்கும் கடன் பெறமுடியாத நிலையொன்றை ஏற்படுத்துகின்றது. இங்கே இக்கடனைப் பெற்றவர்கள் மேல் நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்காததனால் புதியவர்கள் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் எனத் தெரியவருகிறது. தற்பொழுது இக் கிராமிய வங்கிகள் ஒரு தலைமையின் கீழ் ஒன்றுபடுத்தப்பட்டு செயற்படுவது பாராட்டுதற்குரியது. இத்துறையில் நிபுணத்துவம் உடையவர்கள் இதன் விதிமுறைகளை நன்கு ஆராய்ந்து யாழ்.கூட்டுறவாளர்களுக்கு இலகுவில் கடனைப் பெறக்கூடிய வழிவகைகளைச் செய்வது இப்பகுதியின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கவும் உதவலாம். தென்னிலங்கையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வேலை வாய்ப்பைக் கொடுக்கக்கூடிய தொழில் துறைகளை உருவாக்கி பெரும் பயனைப் பெறுகின்றன. யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களினால் ஆரம்பிக்கப்பெற்ற நெசவாலைகள் ஓசையின்றி உறங்குகின்றன. இந்த இயந்திரங்கள் காலத்துக்குக் காலம் சீர்செய்யப் பெற்று மீண்டும் செயலற்று இருக்கின்றன. இந்த இயந்திரங்களின் பராமரிப்புச் செலவு நெசவாலையுள்ள சங்கங்களுக்கு ஒரு பழுவாகவே இருக்கிறது. சம்பந்தப்பட்ட சங்கங்கள் இதுபற்றி எதுவித முடிவும் எடுக்காவிட்டாலும் இனியாவது இதுபற்றிச் சிந்தித்தல் நல்லது. நெசவாலைகள் உள்ள சங்கங்கள் துணி உற்பத்தி செய்வதை ஆரம்பித்தால் சந்தையில் போட்டி போட முடியாதெனவும் ஒரு கருத்து நிலவுகிறது. அது எப்படியாயினும் இவ்விடயத்தில் ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டால் சங்கங்களுக்கும் கூட்டுறவாளர்களுக்கும் நன்மை பயக்கும்.

இவை தவிர காலத்துக்குக் காலம் நிர்வாகச் சீர்கேடு, லஞ்சம், ஊழல் பற்றி பல செய்திகள் வெளி வருகின்றன. இது சம்பந்தமாக திடமான நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் பெறுபேறு பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படவேண்டும். மேலும் இத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு துணிவுமிக்க - நேர்மையுள்ள - விலைபோகாத - கூட்டுறவாளர்கள் இனங்காணப்பட்டு [illegible] கூட்டுறவை [illegible] செயலாற்றும் [illegible] இளைஞர் [illegible] ளாக்க வேண்டும்.

கூட்டுறவாளன்
சுன்னாகம்.

★

# அழுத்தம் கொடுத்து தடுக்காவிடில் ஆபத்து

# மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி நேற்றைய ஆட்டத்தில் வெற்றி

## தொடரையும் கைப்பற்றியது

விஜயவாடா,நவ.25

இந்திய, மேற்கிந்திய அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற 7ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 135ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன் மூலம் இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி 4:3 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் ராகுல் டிராவிட் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதனால் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் 6விக்கெட் இழப்பிற்கு 315ஓட்டங்களைப் பெற்றது. இவ்வணியின் சார்பாக சர்வான் 83ஓட்டங்களையும், வெவல் ஹிண்ட்ஸ் 58ஓட்டங்களையும், மார்லன் சாமுவேல்ஸ் 108ஓட்டங்களையும்



மார்லன் சாமுவேல்ஸ்

பெற்றனர். இதில் சாமுவேல்ஸ் ஆட்டமிழக்காது 75பந்துகளில் 108ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சிற்கு முகம் கொடுக்கமுடியாமல் 180ஓட்டங்களுக்குள் சுருண்டது.

இந்திய அணி சார்பாக அதிகபட்ச ஓட்டங்களாக யுவராஜ்சிங் 7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட 68 ஓட்டங்களைப் பெற்றார். மற்றவர்கள் 25ஓட்டங்களுக்கு மேல் பெறாது ஆட்டமிழந்தமை இந்திய அணியின் தோல்விக்கு காரணமாக அமைந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சில் ஜேர்மைன் லோசன், கிறிஸ் கைல், கொலிமோர் ஆகியோர் முறையே 4, 3, 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

நேற்றைய போட்டியின் ஆட்ட நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த மார்லன் சாமுவேல்ஸும் தொடரின் நாயகனாக கிறிஸ் கைலும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஒ-5)

# கிரிக்கெட் சபை செலவுகள் தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சு விசாரணை

கொழும்பு,நவ.25

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இடைக்கால நிர்வாகக் குழுவின் கடந்தகால செலவுகள் தொடர்பாக இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விசாரணை நடத்தவுள்ளார்.

இதன் முதல்நடவடிக்கையாக நிதி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு இடைக்கால நிர்வாகக் குழுவை அமைச்சர் பணித்துள்ளார்.

கிரிக்கெட் சபையின் நிதி கையாடல் தொடர்பாக ஊடகங்கள் மூலமும், கழகங்கள் மூலமும் பல்வேறு புகார்கள் கிடைத்துள்ளன. இவ்விடயத்தில் முறைகேடுகள் எவையும் இடம்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவது எனது கடமை என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் நிர்மாணிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டரங்கிற்காக ஒப்பந்தகாரர்களுக்கு இன்னும் பணம் செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில் கிரிக்கெட் சபையின் தலைமையகத்தில் புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இவை தொடர்பாக விசாரணை நடத்தப்படவுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு தேர்தல் நடத்தப்பட்டது. மீண்டும் புதிய தேர்தல் நடத்துமாறு பல கழகங்கள் கோரி வருகின்றன.

எனினும், உலகக் கிண்ணப் போட்டிகளுக்கான நடவடிக்கைகளை இடைக்கால நிர்வாகக் குழுவின் மூலம் கிரிக்கெட் சபை மேற்கொள்வதற்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தீர்மானித்துள்ளார்.

(ஒ-5)

# பருத்தித்துறை இளைஞருக்கு கராட்டியில் தங்கப் பதக்கம்

யாழ்ப்பாணம்,நவ.25

சோட்டோக் கான் கராட்டி சர்வதேச சம்மேளன இலங்கைக் கிளை நடத்திய கராட்டிச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறையைச் சேர்ந்த சோதிலிங்கம் காண்டீபன் கத்தரிப்பூ நிறப் பட்டிக்கான தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

அண்மையில் கொழும்பு வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றே இப் பதக்கத்தை இவர் பெற்றுக் கொண்டார்.

மண்ணிறப் பட்டிக்கான போட்டியில் தங்கராசா ஜெயசீலன் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் -

கறுப்புப் பட்டிக்கான போட்டியில் தோமஸ் செபஸ்ரியன் யோசெவ், மண்ணிறப் பட்டிக்கான போட்டியில் வல்லிபுரம் சிவகணேசன், கத்தரிப்பூப் பட்டிக்கான போட்டியில் தோமஸ் அன்ரன் தோமஸ் ஆகிய மூவரும் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர்.

(ஒ-5-175)

# இந்திய கிரிக்கெட் அணி நியூசிலாந்து செல்கிறது

கொல்கத்தா,நவ.25

இந்திய கிரிக்கெட் அணி எதிர்வரும் டிசெம்பர் மாதம் நியூசிலாந்தில் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது.

இந்திய அணி அங்கு 2 டெஸ்ட் மற்றும் 7 ஒருநாள் போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமாகின்றது.

முதலாவது ஒருநாள் போட்டி டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஆக்லாந்தில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னர் அங்கு இந்திய அணி 2 பயிற்சி ஆட்டங்களிலும் ஈடுபடவுள்ளது.

எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டிக்கு முன் இந்திய அணி பங்குபற்றவுள்ள சுற்றுப்போட்டி இது என்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெறவுள்ள போட்டிகளின் விவரம் பின்வருமாறு:-

டிசெம்பர் 12முதல் 16வரை முதலாவது டெஸ்ட் - வெலிங்டன், டிசெம்பர் 19முதல் 23வரை இரண்டாவது டெஸ்ட் - ஹெமில்டன், டிசெம்பர் 26முதல் ஒருநாள் போட்டி - ஆகலாந்து, டிசெம்பர் 29 இரண்டாவது ஒருநாள் போட்டி - ஆக்லாந்து, ஜனவரி முதலாம் திகதி 3ஆவது ஒருநாள் போட்டி - கிறிஸ்ட்சர்ச், ஜனவரி 4ஆம் திகதி 4ஆவது ஒருநாள் போட்டி - குயின்ஸ்டவுன், ஜனவரி 8ஆம திகதி 5ஆவது ஒருநாள் போட்டி - வெலிங்டன், ஜனவரி 11ஆம் திகதி 6ஆவது ஒரு நாள் போட்டி - ஆக்லாந்து, ஜனவரி 14ஆம் திகதி 7ஆவது ஒருநாள் போட்டி - ஹெமில்டன்.

இப்போட்டிகள் அனைத்தும் இரவு, பகல் ஆட்டங்களாக நடைபெறும்.

(ஒ-5)

# பயஸுடன் விளையாடமாட்டேன் என்று கூறுகிறார் மகேஷ் பூபதி

பகிரங்க டென்னிஸ் போட்டியின் இரட்டையர் பிரிவில் லியாண்டர் பயஸுடன் இணைந்து பங்கேற்கப் போவதில்லை என மகேஷ் பூபதி தெரிவித்தார்.

டாடா பகிரங்க டென்னிஸ் போட்டி 2002 டிசெம்பர் 30 முதல் 2003 ஜனவரி 5 வரை சென்னையில் நடைபெறும் என சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் சுற்றுப்போட்டியின் இயக்குநர் .'.பெர்னாண்டோ சோலெர் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் மகேஷ் பூபதியும் பங்கேற்றார்.

ஒற்றையர் பிரிவில் பங்கேற்கப் போவதில்லை எனவும், இரட்டையர் பிரிவில் யாருடன் பங்கேற்பது என்று அடுத்தவாரம் தெரிவிப்பேன் எனவும் பூபதி கூறினார்.

இந்திய வீரர் லியாண்டர் பயஸ், முன்னாள் டென்னிஸ் வீரர் விஜய் அமிர்தராஜ், மகன் பிரகாஷ் அமிர்தராஜ் ஆகியோருக்கு ஒற்றையர் பிரிவில் பங்கேற்க நேரடித் தகுதி (வைல்ட் கார்ட்) வழங்கப்பட்டுள்ளது.

தற்போதைய சம்பியனும், உலகத் தரவரிசையில் 15ஆவது இடத்தில் உள்ளவருமான ஆர்ஜென்டீனா வீரர் கில்லர்மோ கானாஸ், கடந்த ஆண்டு இறுதிக்குத் தகுதி பெற்ற தாய்லாந்து வீரர் பாரடோர்ன் ஸ்ரீ சாப்பன் ஆகியோர் இப்போட்டியில் பங்கேற்கின்றனர்.

இவர்களைத் தவிர ஆஸ்திரேலிய வீரர் மார்க் பிலிட்டோஸிஸ், ஆந்த்ரே டாவெல் உள்ளிட்ட பல்வேறு முன்னிலை வீரர்களும் போட்டியிடுகின்றனர்.

இப்போட்டியின் தகுதி சுற்றுகள் டிசெ. 28, 29ஆம் திகதிகளில் நடைபெறும்.

இரட்டையர் பிரிவின் நடப்பு சம்பியனான லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி இருவரும் வெவ்வேறு வீரர்களுடன் களம் காணவுள்ளனர். (ஒ)

# தெற்காசிய விளையாட்டு விழாவில் ஆப்கானிஸ்தான்!

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள 9ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவில் (சாவ் போட்டிகள்) ஆப்கானிஸ்தானும் பங்குபற்றவுள்ளது.

- இவ்வாறு பாகிஸ்தான் ஒலிம்பிக் சங்கம் வியாழனன்று அறிவித்தது.

மார்ச் 29 ஆம் திகதி முதல் இஸ்லாமாபாத் நகரில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனத்தின் 8 ஆவது நாடாக ஆப்கானிஸ்தான் சேர்க்கப்படவுள்ளது. எதிர்வரும் ஜனவரி 9 ஆம் திகதி நடைபெறும் சாவ் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தின்போது ஆப்கானிஸ்தான் உத்தியோக பூர்வமாக இணைக்கப்படும்.

- இவ்வாறு பாக்ஒலிம்பிக் குழுவின் செயலாளர் லத்திவ்பட் தெரிவித்தார்.

பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, மாலைதீவு, பங்களாதேஷ், பூட்டான், நேபாளம் ஆகிய 7 நாடுகள் தற்போது தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் பெண்கள் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றத் தடை விதிக்கப்பட்டதையடுத்து சர்வதேச ஒலிம்பிக் குழு ஆப்கானிஸ்தானுக்குத் தடைவிதித்தது.

இதனால், சிட்னி ஒலிம்பிக் மற்றும் 1998 இல் பாங்கொக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழா ஆகியவற்றிலும் ஆப்கானிஸ்தான் பங்குபற்றவில்லை.

4 ஆண்டுகளாக அமுலில் இருநத இத்தடை தலிபான் ஆட்சி கவிழ்ந்த பின்னர் நீக்கப்பட்டது. அதன் பின் தென்கொரியாவின் புசான் நகரில் நடைபெற்ற ஆசிய விளையாட்டு விழாவில் ஆப்கானிஸ்தான் பங்குபற்றியது.

அப்போது தெற்காசிய விளையாட்டுச் சம்மேளனத்திலும் ஆப்கானிஸ்தானை சேர்க்குமாறு ஆசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஷேக் அல்பாத் அல்ஷபா ஆலோசனை வழங்கியிருந்தார்.





இதேவேளை, எதிர்வரும் ஜனவரி மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள சாவ் கால்பந்தாட்டப் போட்டிகளில் முதன்முறையாக ஆப்கானிஸ்தான் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-5)

# 'சாவ்' போட்டிகள் பங்களாதேஷில்!

சாவ் உதைபந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் ஜனவரி மாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ளன.

ஆப்கானிஸ்தான் உட்பட்ட 8 அணிகள் பங்குபற்றவுள்ளன. இப்போட்டிகளில் சம்பியனாகும் அணி வெற்றிக்கிண்ணத்துடன் 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களைப் (சுமார் 48 லட்சம் ரூபா) பெறவுள்ளது.

இரண்டாமிடத்தைப் பெறும் அணிக்கு 25 ஆயிரம் டொலர்களும், மூன்றாமிடத்தைப் பெறும் அணிக்கு 15 ஆயிரம் டொலர்களும், நான்காமிடத்தைப் பெறும் அணிக்கு 10 ஆயிரம் டொலர்களும் வழங்கப்படவுள்ளன.

"இப்போட்டிகளில் இலங்கை அணிக்கு கிடைக்கும் பரிசுப் பணம் வீரர்களுக்கே வழங்கப்படும் அதேவேளை, இலங்கை அணி சம்பியன் கிண்ணத்தை வென்றால் வீரர்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாவும் 2ஆம் இடத்தைப் பெற்றால் தலா 50 ஆயிரம் ரூபாவும் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தால் வழங்கப்படும்." - இவ்வாறு இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் உப தலைவர் ஜே.எஸ்.என். ஆனந்தராஜா தெரிவித்தார்.

(ஒ-5)

## ஒருநாள் கிரிக்கெட் தொடரில்

# தென்னாபிரிக்க அணியை இலங்கை அணி வெல்லுமா?

இலங்கை தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ஒரு நாள் போட்டித் தொடர் நாளை மறுதினம் புதன்கிழமை ஜொகன்னஸ்பேர்க் மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

5 ஒருநாள் ஆட்டங்களைக் கொண்ட இத்தொடரில் 2ஆவது போட்டி எதிர்வரும் 29ஆம் திகதி செஞ்சூரியனிலும், 3ஆவது போட்டி எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி பெனோனியிலும், 4ஆவது போட்டி டிசெம்பர் 4ஆம் திகதி கிம்பர்லியிலும் 5ஆவது போட்டி டிசெம்பர் 5ஆம் திகதி டிஹும் பொன்ரீன் மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இவ்விரு அணிகளுக்கிடையிலான முதலிரு டெஸ்ட் போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணியே வெற்றி பெற்றது. முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி இனிங்ஸ் வித்தியாசத்திலும், இரண்டாவது டெஸ்டில் 3 விக்கெற்றுக்களாலும் இலங்கை அணியை தோற்கடித்தது.

தென்னாபிரிக்காவில் உள்ள அநேக ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாகவே அமைந்துள்ளன. நடந்து முடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வேகப்பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சின் மூலமே தென்னாபிரிக்க அணி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

இதன் அடிப்படையில் நோக்கும் போது நடைபெறப்போகும் 5ஒரு நாள் போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணியே வெற்றி பெறக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

இருந்தபோதும் நடந்துமுடிந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விட்ட தவறுகளை இலங்கை அணியின் பந்துவீச்சாளர்களும், துடுப்பாட்ட வீரர்களும் தற்போது சீசெய்து கொண்டால் ஒரு நாள்போட்டிகளில் தென்னாபிரிக்க அணிக்கு பலத்த சவாலை ஏற்படுத்தலாம்.

அத்துடன் தென்னாபிரிக்க அணியுடனான ஒருநாள் போட்டித் தொடரைக் கைப்பற்றும் நோக்கத்துடன் டெஸ்ட் போட்டியில் பங்குபற்றிய 6 வீரர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் பதிலாக அனுபவம் வாய்ந்த வீரர்கள் இலங்கை அணிக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-5)



யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்ட இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகத்திற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா வெற்றிக் கேடயத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஒ-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தரமான Prima கோழிக்குஞ்சின் விலை குறைக்கப்பட்டுள்ளது. Broiler 38/-, வெள்ளைப் பேடு 46/-, சிவப்புப்பேடு 50/-. முன்பதிவு செய்து 28-11-2002 வியாழக்கிழமை மாலை பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(10835)

கச்சேரி நல்லூர் வீதிக்கு அருகில் 2 பரப்பு வெறுங்காணியும், 3 பரப்பில் இரு வீடுகள் மேல்கீழ் வீட்டுடன் (எல்லா வசதிகளும் உண்டு) விற்பனைக்குண்டு. தொடர்பு: S.புவனேந்திரன், 102, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

(10920)

## வீடு விற்பனைக்கு

நவாலி தெற்கு, கலோடை அம்மன் கோயில் ஒழுங்கையில் 6 3/4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 62/2, இந்துக் கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(10793)

## வெல்டர் தேவை

அலுமினியம் ஒட்டு வேலை தெரிந்த காஸ் வெல்டர் தேவை. திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**நஷனல் வீடியோ சென்ரர்,**
182, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.

(10942)

## தவறிவிட்டது

குணேந்திரன் புவனேஸ்வரி என்பவரது தே.அ.அ.(இல.635105747V), கு.சசிமாலா என்பவரது த.அ.அட்டை என்பன அல்லைப்பிட்டிக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மு.குணேந்திரன் (ஏசியா), தம்பாட்டி, ஊர்காவற்றுறை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10939)

இ.கைலைநாதன் என்பவரது வங்கிப் புத்தகம், மோட்டார் சைக்கிள் பற்றுச்சீட்டு, வீடியோ படக்கொப்பி (பட்டமளிப்பு விழா), றெயின்கோட் என்பன அடங்கிய பை சுன்னாகத்திற்கும் கொக்குவிலுக்கும் இடையில் K.K.S. வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சசிக்குமார் நகைக்கடை, K.K.S. வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (10946)

22.11.2002 வெள்ளிக்கிழமை தாவடிக்கும் நல்லூருக்கும் இடையில் தங்கச்சங்கிலி ஒன்று பென்ரனுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அபாலச்சந்திரன், காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தி (T.P.: 222 2585, 222 3423) என்ற முகவரிக்கு அறிவிக்கவும். (10925)

## வெளிவந்துவிட்டது

இலகுவாக இலக்கணத்தைக் கற்றிட வழிகாட்டும் "இலகு தமிழ் இலக்கண, வினா - விடை" தரம் 6-11 வரையான மாணவர்களுக்காகப் புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைவாகத் தொகுத்து எழுதப்பட்ட நூல். ஆசிரியர்: அ.விஜிதா. சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(10921)

## உடன் தொடர்புகொள்ளவும்

ரொயோடா (TOYOTA) வானில் துரித வாகன ஓட்டுநர் பயிற்சியும் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான ஒழுங்குகளும் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு: **91/10, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம்.**
T.P.: 0777 519981

(10947)


# ANTENNA

"We bring the world to your home"



செய்மதி தொலைக்காட்சித் துறையில் 15 வருட அனுபவமிக்க **Sats - Tech** நிறுவனம் தற்போது உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய **DISH Antenna** களை உங்கள் கைக்கடக்கமான விலையில் விற்பனை செய்கிறது.

UN beatable Prices

| | |
|---|---|
| 8' டிஸ்அன்ரனா | Rs. 6999/-இல் இருந்து |
| 10' டிஸ்அன்ரனா | Rs. 9999/-இல் இருந்து |
| 8' டிஜிரல் சிஸ்டம் | Rs. 21999/-இல் இருந்து |
| 10' டிஜிரல் சிஸ்டம் | Rs. 25999/-இல் இருந்து |
| 10' டிஜிரல் மோட்டார் சிஸ்டம் | Rs. 39999/-இல் இருந்து |

மற்றும் அனைத்து உபகரணங்களும் உங்களுக்கேற்ற விலையில்.

☆ "Sats - Tech... is The Trusted name in this field"

☆ "Quality & Reliability is our motto

மேலதிக விவரங்களுக்கு:

***SATS - TECH ENGINEERS***

M/s National Video Centre
182, k.k.s. Road (Near Kulapitty Church)
Kokuvil - Phone: 077 7710785

(10941)


## மரண அறிவித்தல்

### கந்தையா கண்ணுத்துரை

நாலுகால்மடம், பொன்னையா லேன், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கண்ணுத்துரை நேற்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் சந்தானலட்சுமி, யோகேஸ்வரி (ஜேர்மனி), கணேசலிங்கம் (எரிக்கணேஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருச்சிற்றம்பலம், இரத்தினகுமார் (ஜேர்மனி), சித்திராங்கதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் திருஷாந்தினி, காலஞ்சென்ற சபேசன் மற்றும் றஜனி, கேதீஸன் (யாழ்.பல்கலைக்கழகம்), ரமேசன் (ஜேர்மனி), பிரியங்கா, யுரேகா, துவாரகன் ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.11.2002) திங்கட்கிழமை 11 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பொன்னையா லேன்,*
*ஆனைக்கோட்டை.* (10945)

தகவல்:
**எரிக்கணேஸ்.**

## தேங்காய் பிடுங்க மரத்தில் ஏறிய இளைஞர் தவறிவீழ்ந்து படுகாயம்

யாழ்ப்பாணம்,நவ.25

தேங்காய் பிடுங்குவதற்காக மரத்தில் ஏறியவர் பிடித்த ஓலை பிடுங்குப்பட்டதால், தவறிக்கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

நவாலி வடக்கில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தங்கராசா ரஞ்சித்குமார் (வயது 24) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

## தொல்புரத்தில் காசிகாண்ட புராணபடனம்

சுழிபுரம்,நவ.25

தொல்புரம் வழுக்கம்பாறை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் காசிகாண்ட புராணபடனம் சிவஸ்ரீ.சுந்தரராசக் குருக்கள் தலைமையில் தற்போது நடைபெற்று வருகின்றது.

கார்த்திகை மாதம் பூராகவும் தினமும் பிற்பகல் 3.30 மணிமுதல் மாலை 5 மணிவரை இந்தப் புராணபடிப்பு நடைபெற்றுவருகின்றது.

அதேவேளை - ஒவ்வோர் திங்கட்கிழமையும் காசிவிசுவநாதப் பெருமானுக்கு ஆயிரத்தெட்டு அர்ச்சனையும் நடைபெற்றுவருகின்றது.

(எ-28)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கி இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம்,நவ.25

நாய் குறுக்கே பாய்ந்ததினால் ஏற்பட்ட மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

காரைநகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பேரின்பராசா சுகந்தன் (வயது 20) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-15)

## நாவலர் குருபூசை

கோப்பாய்,நவ.25

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி இந்து மன்றத்தினரால் நாளை மறுதினம் புதன்கிழமை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை அனுட்டிக்கப்படவுள்ளது.

குருபூசை தினத்தன்று கல்லூரியில் உள்ள சோமஸ்கந்தர் ஆலயத்தில் விசேட பூசை, பிரார்த்தனை, உரை என்பன இடம்பெறும்.

(எ-72)

## சுழிபுரம் விக்ரோறியாவுக்கு நிதி கிடைத்தது

சுழிபுரம்,நவ.25

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கென ரூபா 15ஆயிரத்தை அண்மையில் கல்லூரி அதிபரிடம் கையளித்தனர்.

சங்கத்தின் பொருளாளர் ந.சிவரஞ்சன் கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளையிடம் இந்தப் பணத்தைக் கையளித்தார்.

கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் சங்க இருப்பு நிதிகள் மூலமாகக் கிடைக்கும் நிலையான வட்டியைக் கொண்டு இந்த நிதியை வழங்கியுள்ளனர். (எ-28)

## அளவெட்டியில் ஜி.சீ.ஈ.சாதாரணதர கருத்தரங்கு

வலி.தெற்கு,நவ.25

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தினரால் இன்றும், நாளை செவ்வாய்க்கிழமையும் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இவ்வழிகாட்டல் கருத்தரங்கில் தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி ஆகிய பாடங்கள் குறித்த விரிவுரைகள் நிகழ்த்தப்படும்.

இன்று திங்கட்கிழமை தமிழ், ஆங்கிலம், சமூகக்கல்வி ஆகிய பாடங்களுக்கும் செவ்வாய்க்கிழமை கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கும் விரிவுரைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-152)

## கல்விச்சாலைக் காட்சிகள்



கெருடாவில் தெற்கு அம்பிகை பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றபோது, விநோத உடைப்போட்டியில் கலந்துகொண்ட மாணவன் ஒருவன் தோன்றும் காட்சி. (எ)



உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோப்பாய்க் கிளை ஏற்பாடு செய்த நிகழ்வுகள் அண்மையில் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். பேராசிரியர் ச.சத்தியசீலன், அதிபர் அ.அகிலதாஸ், ஆசிரியர் மு.சுகுமார் ஆகியோரும் மேடையில் காணப்படுகின்றனர். (எ-110-72)



வண்ணார்பண்ணை இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் கட்டடத் திறப்புவிழா அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் எம்.செல்லையா காணப்படுகின்றார். (எ)




மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது, விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை விரிவுரையாளர் எஸ்.சந்திரசேகரம் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அதிபர் கு.சண்முகநாதன் மற்றும் விருந்தினர்கள் அருகில் காணப்படுகின்றனர். (எ-90)

# காஞ்சிரங்குடா, மருதமுனை, கல்முனை வாடிவீடு படைமுகாம்களை வாபஸ்பெற இணக்கம்

## சமாதான, அபிவிருத்திக் குழுக்களும் அமைக்கப்படும்

காஞ்சிரங்குடா விசேட அதிரடிப் படை முகாம், மருதமுனை வடக்கு எல்லையிலுள்ள பெரிய நீலாவணை அதிரடிப்படை முகாம், கல்முனை வாடி வீட்டு விசேட அதிரடிப்படைமுகாம் என பன வாபஸ் பெறப்படும். தனியார் கட்டடங்கள், பொது இடங்கள் ஆகியவற்றிலுள்ள படைமுகாம்கள் படிப்படியாக விலக்கிக் கொள்ளப்படும்; வீதித் தடைகள் நீக்கப்படும்.

இவற்றுக்கான இணக்கப்பாடு சனிக கிழமையன்று அக்கரைப்பற்றில் நடைபெற்ற பாதுகாப்பு உபகுழுவின் மாவட்டக் கூட்டத்தில் ஏற்பட்டது.

அம்பாறை மாவட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் கார்ள் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் அரச பிரதிநிதிகள் குழுவும், தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு. - அம்பாறை அரசியற்றுறை பொறுப்பாளர் இ.கௌசல்யன் தலைமையில் புலிகள் பிரதிநிதிகள் குழுவும் கலந்து கொண்டன.

அகதிகள் மீள் குடியேற்றம் தொடர்பாக மிகவும் விவரமாகப் பேசப்பட்டது. திருக்கோவில் பகுதியில் கடந்த 12 வருடங்களாக அகதிமுகாம்களில் வாழும் காஞ்சிரங்குடா, கஞ்சிகுடிச்சாறு, சாகாமம், தங்க வேலாயுதபுரம் அகதிகள் மீள்குடியேற்றத்திற்கு இருதரப்பும் சாதகமான பதில்களை வழங்கியிருந்தன.

வீரமுனை மற்றும் குடியேற்றப் பகுதிகளிலுள்ள முஸ்லிம் மக்களின் காணிகளில் அவர்கள் வயல்செய்கையில் ஈடுபட ஆதரவளிப்பதெனவும் இணங்கப்பட்டது.

காஞ்சிரங்குடா படைமுகாமினுள் உள்ள பாடசாலையை உடனடியாக வேறுபடுத்தி, அதனை இயங்கச் செயயவும் கல்முனை வாடி வீட்டில் நிலை கொண்டிருக்கும் படையினர் வாடி வீட்டை கல்முனை மாநகரசபையிடம் கையளித்துவிட்டு வெளியேறவும் இணக்கம் காணப்பட்டது.

பெரிய நீலாவணை ஆலயத்திற்கு முன்னால் உள்ள விசேட அதிரடிப் படை முகாம் வேறிடம் கிடைத்ததும் மாற்றப்படும்.

மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கும், அபிவிருத்திக்கும், சமாதானத்துக்கும் என பிரதேச செயலக ரீதியாக குழுக்கள் அமைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

# உணவு எடுத்துச் செல்ல நேற்றும் தடை

யாழ்ப்பாணம்,நவ.25

நெடுந்தீவில் உள்ள மக்களுக்கு உணவுப்பொருள்களை எடுத்துச் சென்ற யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மூன்றாவது நாளாகவும் குறிகாட்டுவானில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

குறிகாட்டுவானில் சுமார் முந்நூறுக்கும் அதிகமான கலகமடக்கும் பொலீஸார் குவிக்கப்பட்டு, மாணவர்கள் துறைமுகப்பகுதிக்குச் செல்ல விடாது தடுக்கப்பட்டனர். பின்னர் நெடுந்தீவுக்குச் சென்ற மக்களிடம் உணவுப்பொருள்களைக் கொடுத்தனுப் பிவிட்டு மாணவர்கள் திரும்பினர். (ஐ-9)

# தென்மராட்சியில் சிரமதானம்

மாவீரர் வாரத்தை ஒட்டி நேற்று அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

யுத்தத்தினால் சேதமடைந்த ஆலயங்கள் அதன் சுற்றாடல்கள், வீதிகள் ஆகியவை துப்புரவு செய்யப்பட்டன.

சில கிராம அலுவலர் பிரிவுகளில சிரமதானங்களில் கலந்து கொண்டோருக்கு பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசப் புத்தகங்கள் மாவீரர் நினைவாக வழங்கப்பட்டன.

இதேவேளை, சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய இடங்களில் மாவரர் நினைவுப் பந்தல் அமைக்கப்பட்டு அப்பகுதிகள் சிவப்பு, மஞ்சல் கொடிகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

# ஒஸ்லோவில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியத்துவம் வாய்ந்த சந்திப்பும் பேச்சும் நேற்று நோர்வே நேரப்படி மாலை 5.00மணிக்கு (இலங்கை நேரம் இரவு 10 மணி) நடந்தது.

பிரதமர் ரணிலும் அன்ரன் பாலசிங்கமும் தனித்தனியாக வேறு நாடுகளின் பிரதிநிதிகளுடனும் பேசினர்.

நேற்று மாலை மாநாட்டுப் பிரதிநிதிகளின் ஒன்றுகூடல் நிகழ்ச்சியும் நடந்தது. இந்த நிகழ்ச்சிகளின்போது அன்ரன் பாலசிங்கம் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளுடன் கைகுலுக்கியும சிறு சம்பாஷணைகளை நடத்தி யும் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டார்.

பல்வேறு நாட்டு அரசுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் அழைப்பின்பேரில் தமிழீழ விடுதலைப் புலிகளும் கலந்துகொண்டது குறித்துப் பிரதிநிதிகள் பலர் மகிழ்ச்சி தெரிவித்தனர். ஒரு சிலருடைய மகிழ்ச்சி வியப்புக் கலந்ததாக இருந்தது.

மாநாட்டில் ஆரம்ப உரையை இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜென் பீட்டர்ஸனும் நிகழ்த்துவர். மாநாட்டின் இறுதியில் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருக்கும் இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் தமது நிலைப்பாடுகளையும் பிரச்சினைகளையும் மாநாட்டுப் பிரதிநிதிகளிடம் விளக்கிக் கூறுவர்.

மாநாட்டின் ஆரம்பக் கூட்டத்தை அடுத்து கூட்டத்தொடர்கள் ஆரம்பமாகும். இத்தொடர்களில் இலங்கை சம்பந்தமான இரண்டு விடயங்கள் பேச்சுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வடக்கு - கிழக்கை மீண்டும் கட்டியெழுப்பவும் அபிவிருத்தி செய்யவும் தேவையான அவசர உதவிக்கான சர்வதேச ஒத்துழைப்பைப் பெறுவது இதில் முதலாவது விடயமாகும்.

இம்மாநாட்டுக்காக உலகின் பல நாடுகளின் அரசியல் தலைவர்களும் அரசாங்க அதிகாரிகளும் ஏற்கனவே ஒஸ்லோ வந்து சேர்ந்துவிட்டனர்.

கனடா வெளிவிவகார பிரதியமைச்சர் டேவிட் கில்கோர், டென்மார்க் வெளிவிவகார பிரதியமைச்சர் பீட்டர் ஹெரன்சன், ஐரோப்பிய ஆணைக்குழுவின் ஆணையாளர் மார்கொட் வோல்ஸ்ட்ரோம்,

ஜேர்மனியின் பொருளாதார, அபிவிருத்தி தொடர்பான பிரதியமைச்சர் எர்க்ஸ்டெதர், ஜப்பான் அரசின் விசேட பிரதிநிதி யசுசி ஆகாஷி, அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மி டேஜ் ஆகியோர் இம்மாநாட்டில் பங்குபற்றுபவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

சர்வதேச அபிவிருத்திகளுக்கான பிரதியமைச்சர் செல்வி கிளேயா ஷொட்டி பிரிட்டனைப் பிரதிநிதித்துவம் வகிக்கிறார்.

### 39 நாடுகள் பங்கேற்கும்

ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்றுவதை 39 நாடுகள் நேற்று வரை உறுதிப்படுத்தியிருந்தன.

அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஆஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஆணைக்குழு நாடுகள், சீனா, டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, கிரீஸ், ஐஸ்லாந்து, இத்தாலி, தென்கொரியா, குவைத், நெதர்லாந்து, சவூதி அரேபியா, சுவிட்ஸர்லாந்து, சுவீடன், தாய்லாந்து, ஆஸ்திரியா, பெல்ஜியம், குரோஷியா, கியூபா, டொமினிகன் குடியரசு, கௌதமாலா, ஹங்கேரி, இந்தியா, இஸ்ரேல், மொரோக்கோ, பாகிஸ்தான், போர்த்துக்கல், ருமேனியா, ரஷ்யா, ஸ்லோவாக்கியா, தென்ஆபிரிக்கா, ஸ்பெயின் ஆகியவை இம்மாநாட்டில் பங்குபற்றும் நாடுகளில் அடங்கும். (ஐ-9)

# அரசு - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவி வழங்கும் நாடுகளின் இந்தக் கூட்டத்தில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் பிரதிநிதிகள் பங்குபற்றவில்லை. ஆனால், இந்த அமைப்புகளின் பங்குதாரர்களான அபிவிருத்தியடைந்த நாடுகளின் பிரதிநிதிகளே தற்போதைய கூட்டத்தில் பங்குபற்றுகின்றனர்.

மேற்படி அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்குபற்றும் - இலங்கைக்கு உதவும் விவகாரம் சம்பந்தமான பிறிதொரு கூட்டம் சில மாதங்களின் பின்னர் ஜப்பானில் நடைபெறும். அந்தக் கூட்டத்திலேயே இலங்கைக்கு உதவுவது குறித்து நிதிக்கணக்கில் விடயங்கள் ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்படும். இந்தக் கூட்டத்தில் அத்தகைய முடிவு எடுக்கப்படமாட்டாது.

எனினும், உதவி வழங்கும் நாடுகள் தமது இணக்கத்தைத் தெரிவிக்கும் வகையில் அடையாளத் தொகை எதையும் தற்போதைய கூட்டத்தின் முடிவில் விடுக்கக்கூடும்.

*கேள்வி:* ஜப்பானில் நடைபெறும் கூட்டத்தில்தான் உதவுதொகை குறித்துத் தீர்மானிக்கப்படும் என்றால் அதற்கு முன்னர் இந்தக் கூட்டம் ஏன இப்போது.....?

*அமைச்சர்:* ஆம், அதில் முக்கிய விடயம் உள்ளது. ஜப்பான் கூட்டம் சகல ஏற்பாடுகள், முன்னறிவித்தல்கள், கலந்தாலோசனைகள், திட்ட அறிக்கைகள் முதலியவற்றோடு நடத்தப்படும். அப்படி உரிய ஏற்பாடுகளுடன் நடத்தப்படும் கூட்டத்தின் மூலமே உதவு தொகையை உரிய முறையில் பெற முடியும். அத்தகைய கூட்டத்தை ஏற்பாடு செய்வதற்கு கால அவகாசம தேவை; நீண்ட நாள்கள் பிடிக்கும்.

ஆனால், தற்போதைய சமாதான முயற்சிகளில் காணப்பட்டுள்ள இணக்கத்தை சர்வதேச மயப்படுத்தி, சர்வதேச அரசியல் இணக்கமாக அதை மாற்ற வேண்டிய அவசரத் தேவை எமக்கு இருந்தது. அதன் மூலம் சமாதான முயற்சிகளை மேலும் வலுப்படுத்த நாம் திட்டமிட்டோம்.

சமாதான முயற்சிகளுக்கு சர்வதேச இணக்கத்தை வெளிப்படுத்தும் வாய்ப்புக்காக ஜப்பான் கூட்டம் வரை காத்திருப்பது பொருத்தமற்றது எனக் கருதினோம். அதனால்தான் அதற்கு முன்னர் இத்தகைய கூட்டம் ஒன்றுக்கு வழிசெய்தோம்.

அமெரிக்கா, பிரிட்டன் - குறிப்பாக ஜப்பான் - போன்ற நாடுகள் தமது சிரேஷ்ட தலைவர்களை இந்தக் கூட்டத்துக்கு அனுப்புகின்றன. இந்தக் கூட்டத்தின்மூலம் அவர்கள் வெளிப்படுத்தப்போகும் ஆதரவு வெறும் நிதி மற்றும் உள்நாட்டு அபிவிருத்தி சம்பந்தப்பட்டதல்ல அதற்கு அப்பால் சமாதான முயற்சிகளில் சகல தரப்புகளையும் - சர்வதேச அபிப்பிராயத்தையும் - பிணைத்து வைக்கும் விவகாரத்துடன சம்பந்தப்பட்டது. அந்தத் தேவைக்காகவே ஜப்பான் கூட்டத்துக்கு முன்னர் இந்தக் கூட்டம் எட்டும் என எதிர்பார்க்கிறோம். எனவே, இந்தக் கூட்டத்தின பெறுபேறை நிதி உதவியின் கணக்கில் எடைபோடாமல் சர்வதேச அரசியல் இணக்கத்தின் அளவில் எடை போடுங்கள் - என்றார் அமைச்சர் மிலிந்த. (ஐ)


## தொடர்புகொள்ளவும்

24.11.2002 மாலை கொழும்பிலிருந்து புறப்பட்ட லயன் எயர் விமானத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் இறங்கும்போது எனது பயணப்பொதியை மாறி எடுத்துச் சென்றவர் அதனை கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைத்து தனது பொதியைப் பெற்றுக்கொள்ளவும்.

வி.சஞ்ஜேந்திரா
இல.1, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C-25065)

## யாழ். நகரில் மற்றொரு கணனித்துறை மையம்

இலக்கம் 302/1, நாவலர் வீதியில்
(ஆனைப்பந்தி தபால் நிலையத்துக்கு அருகில்)
இன்று (25.11.2002) திங்கட்கிழமை
கோலாகல ஆரம்பம்!
மாணவர்கள், தொழிற்றுறையினருக்கு
பல வரப்பிரசாதங்கள்.
விவரங்கள் விரைவில் உதயனில்!

CCS COLLEGE OF COMPUTER STUDIES
302/1, NAVALAR ROAD,
AANAIPANTHY, JAFFNA.
(11006)

## நாகம்ஸ் சுன்னாகம்

விஜய். சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த
யூத் (ரீலீஸ்)
காட்சிகள்: 11.00, 3.00
விசேட காட்சிகள்: வெள்ளி, சனி, ஞாயிறு 6.30 (புதிய நேரம்)
(10017)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

வீனித், நந்தினி நடித்த
ஆவாரம் பூ
காட்சிகள்: 11.00, 2.45, 6.00 (பு.நேரம்)
27.11.2002 முதல்
BLACK EAGLE
(C-24617)

## ராஜா யாழ்ப்பாணம்.

3ஆவது வாரம்
அஜித் (இருவேடங்களில்), மீனா நடித்த



வில்லன் (ரீலீஸ்)
கா.நே.: 10.30, 2.30, 6.30 (புதிய நேரம்)


## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியர் யசோதரா விவேகானந்தன் அவர்களின் அன்பு மாமனார்

### இரத்தினம் பொன்னுத்துரை

*(இளைப்பாறிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் சி.ஐ.டி.)*

அவர்கள் காலமானதையிட்டு துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சாவகச்சேரி.* (11002) திலக நர்த்தனாலய மாணவர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சீவரெத்தினம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சீவரெத்தினம் நேற்று (24.11.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சி தம்பதிகளின மகனும், தங்கம்மாவின் கணவரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - வள்ளியம்மையின் மருமகனும், காலஞ்சென்றவர்களான முருகதாஸ், கேதீஸ்வரன் (ஆரூரன்) மற்றும் இராசலெட்சுமி, சண்முகதாஸ் (மோகன்), கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2002) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுருவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மன் வீதி,*
*புளியங்கூடல்.*
(11014)

தகவல்:-
மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## செல்லையா பேனாட் இராசேந்திரம்

*(மற்றாஸ்)*

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பேனாட் இராசேந்திரம் 23.11.2002 சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - றோசம்மா தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி இ.பேர்ணதேத்தம்மாவின் (திரவியம்) அன்புக் கணவரும் ஜோய் டிலிப் குமாரின் (லண்டன்) அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சின்னப்பு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஹென்றி கியூபேட், செபரட்ணம், திருமதி பிலோமினம்மா, திருமதி ஞானம்மா (ஆசிரியர், யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜோன் யோசப் (கனடா), திருமதி திரேசம்மா, திருமதி கிறீஸ்ரீனம்மா, பா.திலகராஜா (ஆசிரியர், யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம் - சமாதான நீதிவான்) ஆகியோரின் சகலனும் மனோன்மணி, ஞானமணி, செல்வம், மகேஸ், குலசிங்கம் ஆகியோரின் சகோதரனும் டங்ஸ்ரன் ஜெகதேவா, செறின் தயாளினி, றூப வசந்தினி (சுவிஸ்), லிடியா ஜெயநந்தினி, ஜஸ்ரின் ஜெயந்தன் (ஜேர்மனி), டனிஸ்ரன் பவாநந்தன், மேறலின் மனோஜெயன் (ஸ்ரான்லிக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அஞ்சலோ உதயகுமார், (பொறியியலாளர்), கிறிஸ்ரி சாந்தகுமார் (கனடா), திரேசினா ஞானமணி (கனடா), அஞ்சலினா ஞானறஜனி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் கிங்ஸ்ரான் திலக்குமார், அனிஸ்ரன் அருண்குமார் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி) அனிஸ்ரீனா சுகிர்தினி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.


அன்னாரின் உடல் நாளை (26.11.2002) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிக்கு நல்லடக்கத்துக்காக இல்லத்திலிருந்து புனித சூசையப்பர் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கோப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆம் கட்டை,*
*இராச வீதி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*
(11013)

தகவல்:
மனைவி:திருமதி இ.பேர்ணதேத்தம்மா (திரவியம்)
மகன்:இ.ஜோய்டிலிப்குமார் (லண்டன்)





ஒஸ்லோவில் நேற்று நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பின்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், நோர்வே அனுசரணையாளர்களான விடர் ஹெல்கிஸன், எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் ஒன்றாக...





பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று ஒஸ்லோ போய்ச் சேர்ந்தவுடன் எடுக்கப்பட்ட படங்கள் இவை. பிரதமருடன் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஹக்கீம் மற்றும் எரிக் சொல்ஹெய்ம், விடர் ஹெல்கிஸன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.

# நன்றி நவிலல்

## அமரர் கணபதிப்பிள்ளை கணேசலிங்கம்

(கணபதி கணேசன்)

எமது குலவிளக்கு அமரர் கணபதி கணேசன் அவர்களின் மறைவையொட்டி எமது ஆறாத்துயரில் பங்கேற்ற அனைத்து அன்புள்ளங்களுக்கும் எம் நன்றியறிதலை சமர்ப்பிக்கின்றோம்.

சென்னை அஸ்வினி சௌந்தரா வைத்தியசாலை டாக்டர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும், பேராசிரியர் டாக்டர் முத்து சேதுபதி, பேராசிரியர் டாக்டர் வெங்கடேஷ், டாக்டர் திருமதி சுகுவனா மற்றும் அவர்கள் வைத்திய குழுமத்தினருக்கும், DYALISIS STAFF இனருக்கும், சிறுநீரகம் வழங்கி பேருதவி புரிந்த திருமதி சசி அவர்களுக்கும், அன்னாரின் பூதவுடலை யாழ். எடுத்துவர துரிதகதியில் உதவிகள் புரிந்த இலங்கைத் தூதரக அதிகாரிகள், FLMIS CARGO COMPANY யினர், சென்னைவாழ் நண்பர்கள், உறவினர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும், கொழும்பில், சிலாபத்தில் உதவிய அனைத்து அன்புள்ளங்களுக்கும், அன்னாரின் இறுதிக்கிரியையின்போது வருகைதந்தோர், மலர்வளையம் சாத்தியோர், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோர், இரங்கலுரை நிகழ்த்தியோர், சகலவழிகளிலும் உதவியோர், துயரத்தில் பங்கேற்றோர் அனைவருக்கும் மற்றும் எமது துயரத்தில் பங்குகொண்ட யாழ். பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், யாழ். கல்வித் திணைக்களம் சார்ந்தோர் அனைவருக்கும், வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி, தொலைநகல், மின்அஞ்சல் மூலம் எமக்கு ஆறுதலளித்தோர் அனைவருக்கும், அமரர் பற்றிய செய்திகளைப் பிரசுரித்து அஞ்சலி செலுத்திய வலம்புரி பத்திரிகை சமூகத்தினருக்கும், மலேஷியா, கோலாலம்பூரில் நினைவஞ்சலிக் கூட்டம் நடத்தி அமரரைக் கௌரவித்த செம்பருத்தி பப்ளிகேஷனைச் சார்ந்தோர், மலேஷிய நண்பர்கள் அனைவருக்கும் இலங்கை, இந்தியா, மலேஷியா, கனடா, லண்டன் எழுத்தாளர் சமூகத்தினருக்கும் நாம் கரம் கூப்பி நன்றி செலுத்துகின்றோம்.

| | |
|---|---|
| சகோதரர். | கௌரி கணேசலிங்கம் (மனைவி), பிள்ளைகள், |
| க.மயில்வாகனம் (CANADA) | மைத்துனர் |
| க.லோகநாதன் (ஓய்வுநோக்குநர், வலம்புரி) | திரு. முருகானந்தன் |
| க.மகாலிங்கம் (வவுனியா) | (COMPUTER ENGEENER INFORMATION TECHNOLOGY CHIEF CONSULTANT- NORWAY) |
| திருமதி கதிர்வேல் | |
| மருமகன்மார் | தி.பிறைகுமார் |
| க.சசிதரன் (LONDON) | (I.T.ADMINISTRATOR, NETWORK STUDENT - NORWY) |
| க.விஜிதரன் (விளை.உத்தியோகத்தர், நெடுந்தீவு) | இல.70, சிவன்தெற்கு வீதி, |
| க.ஜெகதால் (பேராதனை பல்கலைக்கழகம்) | திருநெல்வேலி, |
| திரு.திருமதி ஸ்ரீதரன (SURVEYOR CHIAW) | யாழ்ப்பாணம். |
| திரு.திருமதி பி. கணேஷ் (INDIA) | (10938) |

## சர்வகட்சி மாநாடு கூட்ட ஜனாதிபதி நடவடிக்கை

சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுக்கவிருக்கிறார் என்று ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் மூலம் தெரியவருகின்றது.

கடந்த 12ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்த ஒரு யோசனையின் அடிப்படையிலேயே ஜனாதிபதி இந்த நடவடிக்கையை எடுக்கவிருக்கிறார்.

அரசும் புலிகள் இயக்கமும் நடத்தி வரும் சமாதானப் பேச்சுக்கள், நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி, தனியார் மயமாக்கல் உட்பட பல பிரச்சினைகள் குறித்து அரசியல கட்சிகளினதும் பொது அமைப்புகளினதும் கருத்துக்களை அறிந்து, பொதுவான செயற்றிட்டமொன்றை வகுப்பதே சர்வகட்சி மாநாடு கூட்டப்படுவதன் நோக்கமாகும் எனவும் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம்மாநாடு பெரும்பாலும் அடுத்த ஆண்டு ஜனவரியில் கூட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

## ஐஸ்தொழிற்சாலை புனரமைப்புவேலை ஆரம்பம்

குருநகர்,நவ.25

போரினால் சேதமடைந்துள்ள வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச சங்கத்தின் சமாசத்திற்குச் சொந்தமான பனிக்கட்டித் தொழிற்சாலையை புனரமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சமாசத்தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார் (எ-51)

## ரணில் - பாலா...

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தப்பேச்சின் முழுமையான விவரங்கள் வெளியிடப்படவில்லை.

குடாநாடு உட்பட வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு நிலைமை பற்றி இருவரும் முக்கியமாகப் பேசினர்.

குறிப்பாக நெடுந்தீவில் ஈ.பி.டி.பியின் மீள் பிரவேசத்தால் ஏற்பட்டிருக்கும் பிரச்சினை பற்றி பாலசிங்கம் பிரதமரிடம் சுட்டிக்காட்டினார் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுத் தேர்தல் வரக்கூடும் என்று எண்ணியே ஈ.பி.டி.பியினர் இப்படி நடந்து கொள்கின்றனர் என்று பாலசிங்கம் பிரதமரிடம் கூறினார் என்றும், ஈ.பி.டி.பியின் மீள் பிரவேசத்தால் நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு கண்காணிப்புக்குழு மூலம் நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்படும் என்று அவருக்கு உறுதியளித்தார் என்றும் தெரியவந்தது.

பேச்சுப் பற்றிப் பாலாவிடம் கேட்டபோது, அது நம்பிக்கை அளிப்பதாகவும் ஆக்கபூர்வமானதாகவும் இருந்தது என்றார். பேச்சு முன்னேற்றமான ஒரு நடவடிக்கை என்றும் பாலா தெரிவித்தார்.

"பாதுகாப்பு விடயங்கள் பற்றிப் பேசினோம்; அரசியல் விடயங்கள் பற்றியும் பேசினோம்; வடக்கு - கிழக்கில் இன்று உள்ள நிலைமை பற்றிப் பேசினோம். இப்போது நியமிக்கப்பட்டுள்ள உபகுழுக்களின் செயற்பாட்டு கடமைகளைப் பரவலாக்குவது பற்றியும் ஆலோசித்தோம்" என்றும் அன்ரன் பாலசிங்கம் 'உதயன்' பிரதிநிதியிடம் தெரிவித்தார்.

இதேவேளை -

அன்ரன் பாலசிங்கத்துடனான சந்திப்பை முடித்துக்கொண்ட பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நோர்வேக்கான இந்தியத்தூதர் கோபால கிருஷ்ணகாந்தியைச் சந்திக்க இருந்தார். (ஐ)


# கௌரவிப்பு நிகழ்வு அழைப்பு

## மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்

எமது சங்க எல்லைக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நாளை (26.11.2002) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைத்து மாவீரர்களின் பெற்றோர்களையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். நிகழ்வு வியாபார மூலை, பருத்தித்துறையிலுள்ள சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

செயலாளர்,
மயிலிட்டித்துறை கடல் தொழிலாளர்
கூட்டுறவுச் சங்கம்.

(10882)

# நலமான வாழ்வுக்கு என்றும் நலந்தருவது

## புரோசிங் (PROZINC)




- ★ இழந்த சக்தியை மீட்டெடுத்தல்.
- ★ இரத்த உற்பத்தியை அதிகரித்தல்.
- ★ வளரும் பிள்ளைகளுக்கு பசி உணர்வை தூண்டுதல்.
- ★ போன்றவற்றில் முக்கிய பங்கு வகிப்பதுடன்

புரோசிங் - அனைத்து விற்றமின்களுடன் அதியுயர் தாவரப் புரதச்சத்து நிறைந்துள்ளதால் சைவப் பிரியர்களுக்கும் உகந்தது.

புரோசிங் - கர்ப்பிணித் தாய்மார், விளையாட்டு வீரர், வளரும் பிள்ளைகள், முதியோர் என முழுக் குடும்பத்தினருக்கும் ஏற்ற சிறந்த பானம்.

புரோசிங் - தற்போது யாழ்.நகரின் அனைத்து மருந்தகங்களிலும் கிடைக்கப்பெறும்.

தொடர்புகளுக்கு :
JEGAN PHARMACY - யாழ். நகர். Tel: 222 3191
ARKEM - கொழும்பு. Tel: 470290, 071-341956

(C-24532)

# பல்கலைக்கழக A.T.I பட்டதாரி மாணவர்களே!

நீங்கள் 2003 MARCH இல் நடைபெறும்
**CMA Professional- I** பரீட்சையில்
தோற்றுவதற்கு நாம் ஒழுங்குகள் செய்துதருகின்றோம்.

குறிப்பு: - 29.11.2002 இற்கு முன்னர் தொடர்புகொண்டு உங்களது பதிவுகளை மேற்கொள்ளவும்.

**CMA** Foundation Stage இற்கான விரிவுரைகள் நடைபெறுகின்றன.
இதற்குரிய பதிவிற்கான இறுதித்திகதி 21.11.2002

தொடர்பு:-
**CAREER .COM INSTITUTE**
NO.79, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம்: தினமும் காலை 10.00 - 2:30 வரை.

(C-25064)

# மரண அறிவித்தல்

## கந்தையா திருநாவுக்கரசு (K.T.அரசு)

(முன்னாள் காசாளர் - கொழும்பு சீவம்ஸ் எக்ஸ்போர்ட் - ஹொட்டல் சீவம்ஸ் விடுதி)

உடுவில் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு கடந்த 23.11.2002 சனிக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா - இராசமணி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் அமரர் சுப்பிரமணியம், செல்லத்துரை, அமரர் நடராசா, முத்தையா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2002) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் (உடுவில்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்பலவாணர் வீதி,
காளி அம்மன் கோயிலடி,
உடுவில்,
சுன்னாகம்.

தகவல்:
க.முத்தையா
(சகோதரன்)

(11009)